ISSN 1888-1246

PUBLIC LIBRARY
JAFFNA

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 06 டிசெம்பர் 2009 பார்வை: 64 விலை: ரூபா 50.00




"உறக்கம் பற்றிய அறிகையும் கற்றலில் ஊடுதொடர்பும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 14




**விலை: 100.00**

தொடர்பு:
3, டொரிங்டன் அவனியூ
கொழும்பு 07
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: koodam@viluthu.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : பேராசிரியர். சபா. ஜெயராசா
பேராசிரியர். சோ. சந்திரசேகரன்

ஆலோசகர் குழு : முனைவர் மா. கருணாநிதி
பேராசிரியர். மா. சின்னத்தம்பி
பேராசிரியர். மா. செல்வராஜா
திரு. தை. தனராஜ்

நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

துணை நிர்வாக ஆசிரியர் : காகபதி நடராஜா

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்

இதழ் வடிவமைப்பு : [illegible]

அச்சு : சேமமடு பதிப்பகம்
தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகளுக்கு : AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506[illegible]
E-mail : [illegible]2006@gmail.com
ahavili2006@yahoo.com

## உள்ளே...

- உறக்கம் பற்றிய அறிகையும் கற்றலில்... 03
- சமூகமனவெழுச்சிசார் கற்றல் எதிர்காலத்திற்காக... 06
- ஆசிரியரும் ஆய்வாளர் வகிபாகமும் 10
- குவியக் குழுமம் ஒரு பயன்மிக்க... 15
- பாடசாலையில் வினைத்திறனை... 18
- ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி... 24
- இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகள் 30
- பாடசாலைக்கு தாமதமாக வரும்... 35
- ஆசிரியர்களை ஊக்குவிப்பதில் அதிபரின்... 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்படாக் கரங்கள்...

எமது வரன்முறையான கலைத்திட்டச்செயற்பாடுகள் மாணவரின் ஆளுமை ஆக்கத்திலே வலிமையான விசையாக தொழிற்படுகின்றது. இதுபோன்று மறைக்கலைத்திட்டம் அல்லது மறைந்தியங்கும் கலைத்திட்டமும் மாணவரின் உளக் கட்டமைப்புக்கள், நடத்தைகளிலும் அதிகதாக்கங்களை உருவாக்குதலையும் மனங்கொள்ள வேண்டியுள்ளது.

எமது பாடசாலை கலைத்திட்டம் பரீட்சையை இறுகிய மத்தியாக கொண்டிருத்தல் பாதகமான எதிர் விளைவுகளை உருவாக்கிய வண்ணமுள்ளது. பல கோணங்களிலும் மாணவர்கள் பாதிக்கப்படுவதற்குரிய அபாயங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. மீத்திறன் கொண்ட மாணவர்களுக்குரிய ஏற்பாடுகளையும் ஊக்களையும் தருதல் முக்கியமானது. ஆனால் அதற்காக ஏனைய மாணவர்களின் கற்றலையும் எதிர்காலத்தையும் அவலங்களுக்குள்ளாக்கிவிட முடியாது.

இன்று அனைத்து மாணவர்களும் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகும் பாதகமான நிலைகள் மேலும் மேலும் கூர்ப்படைந்து வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. தனியார் கல்விநிலையங்களில் மாறுபாடான செயற்பாடுகளும் ஆசிரியர்களின் வாண்மைக்கு முரணனான அணுகுமுறைகளும் மாணவர்களுக்கு நெருக்கீடுகளை உருவாக்கத் தொடங்கியுள்ளன. பாடசாலைகளில் நேர்முக அழுத்தங்கள் மட்டுமன்றி மறைமுகமான தென்படா கரங்களான அழுத்தங்களும் மேலெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன. அறிவினதும் பாடப்பரப்புகளின் பன்முகப் பாங்குகளை புரிந்து கொள்ளாது, ஒருவழிப் பாதையில் அல்லது ஒற்றைப் பரிமாணத்தில் மாணவர் உருவாக்கப்படும் நிலை வலுப்பெறுகின்றது. பரீட்சை வினாத்தாள்களிலே சிறிதளவு மாற்றம் ஏற்படும் பொழுது கூட மாணவர் குழம்பிவிடுகின்றனர். இரவு பகலாக கற்ற மாணவர்கள் ஏன் பரீட்சைகளில் தோல்வியடைகின்றார்கள். அல்லது குறைந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். என்பதற்கு மேற்கூறிய கருத்தே விடையாக அமைகின்றது.

அறிவுநிலையில் தம்மை புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் காலாவதியான ஆசிரியர்களாகிவிடுகின்றனர். காலாவதியான அறிவை வைத்துக்கொண்டு மாணவர்களை பரீட்சைக்கு தயாரிக்கும் பொழுது புதிய விடயங்களிலே அறிவும் அனுபவமும் போதாமையால் பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. மேலும் பாடத்திட்ட ஆக்கங்களிலும் பெரும் பின்னடைவு காணப்படுகின்றன. இவற்றை நாம் முழுமையாகப் புரிந்துகொள்வதாக இல்லை.

இதைவிட ஆசிரியர்கள் பெற்றோர் என்னும் வகிபாகத்தையும் மேற்கொள்ளுபவர்களாக உள்ளனர். பொதுப்பரீட்சை முடிவுகள் வெளிவரும் பொழுது சமூக எதிர்ப்பார்க்கை வித்தியாசமாக உள்ளது. பரீட்சையில் தோல்வி வாழ்க்கையின் தோல்வியாக உருமாற்றப்படுகிறது. இனி வாழ்க்கையே இல்லையென்று நினைக்குமளவிற்கு கருத்தேற்றம் வலுப்பெற்றது வருகிறது. தற்கொலை செய்யும் எண்ணத்தை மாணவர்களிடம் கடத்துகிறது. சிலர் தற்கொலை செய்யும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள். பின்னர் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். சிலர் மரணத்தை தழுவியுள்ளார்கள். இந்த எதார்த்தம் சமகால கல்வியுலகில் வலுவாகச் செல்வாக்கு செலுத்துகிறது.

இன்று கல்வியுலகில் பணிபுரியும் பெற்றோர்கள் பலரால் பிள்ளைகள் பாதிப்புக்கு உள்ளாகி வரும் காட்சிகள் சொல்லிமாளா. ஐந்தாம்தரப் புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெறவில்லையென ஆசிரியர் ஒருவர் தமது பிள்ளைக்கு கொடுத்த தண்டனை பெரிது. ஆம்! அப்பிள்ளையுடன் ஒரு வாரம் முகம் கொடுத்துப் பேசவில்லை. இந்தத் தருணங்களில் அந்தக் குழந்தையின் மனவோட்டம் சிந்தனை எப்படி இருந்திருக்கும்? நினைக்கவே அழுகை வருகிறது. இத்தனைக்கும் அந்த ஆசிரியர் கல்வியியல் பாடப்பரப்பை கரைத்துக் குடித்தவர். ஆனால் வாழ்க்கையில் குழந்தை வளர்ப்பில், குழந்தைக்கும், பெற்றோருக்கும் இடையிலான உறவில் தோல்வி கண்ட ஒருவராக உள்ளார் என்பதை அவரது படிப்பு அவருக்கு உணர்த்தவில்லை. ஆசிரிய அனுபவமும் அவருக்கு கற்றுக் கொடுக்கவில்லை.

இதுபோல் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனை அவனது தந்தையார் தவணைப் பரீட்சையில் புள்ளிகள் குறைந்தற்காக பிள்ளையை ரொம்பவும் திட்டினார் அடித்தார் தனியாக அறையில் வைத்துப் பூட்டினார். பிள்ளை இந்தத் தண்டனைகளை தாங்க முடியாது தன்னைத் தானே தற்கொலை செய்து கொண்டது. அந்தத் தந்தை உதவி அதிபராக பாடசாலை ஒன்றில் கடமை புரிபவர்.

ஒரு காலத்தில் பரீட்சையில் குறைந்த புள்ளி பெற்ற மாணவர்கள் பலர் வீட்டாரின் நெருக்குவாரத்துக்குப் பயந்து இயக்கத்தில் சேர்ந்தவர்கள் அதிகம். இப்படியான பண்பாடும் எம் மத்தியில் இருந்தது என்பதையும் மறக்கக் கூடாது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். இவரது கல்விப்பணியின் சிறப்புக்காக பாராட்டுக்கள் கௌரவங்கள் பெற்று இன்று வாழ்பவர். ஆனால் பிள்ளை வளர்ப்பில் இவர் தோல்வி கண்டவர்.

எமது கல்வி ஆளுமைமிக்க மாணவரை உருவாக்குவதில் தோல்வி கண்டுதான் வருகிறது. பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெறுபவர் தான் கெட்டிக்காரப் பிள்ளையென்ற பிழையான பிம்பம் கட்டமைக்கப்படுகிறது. குறிப்பாக கல்வித்துறை சார்ந்தவர்கள் தமது பிள்ளைகளை தாமே பலியெடுக்கும் சாமிகளாக வலம் வருவது தான் வேதனையளிக்கின்றது. இதைவிடக் கொடுமையானது தினம் தினம் சிறைக்காவலர்களாக இருந்து தம் பிள்ளைகளை வதைப்பதுதான்.

தெ.மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY



# உறக்கம் பற்றிய அறிகையும் கற்றலில் ஊடுதொடர்பும்

சபா.ஜெயராஜ்

நித்திரை, தூக்கம், உறக்கம், கண்வளர்தல், கண்ணயர்தல் போன்ற பல சொற்கள் ஒரே எண்ணக்கருவைக் குறிப்பிடுவனவாய் தமிழில் அமைந்துள்ளன. கற்றலுக்கும் உறக்கத்துக்குமுள்ள தொடர்புகள் சமகாலத்து உளவியலாளரின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்து வருகின்றன. "உறக்கம் கற்றலுக்குத் தடையானது" என்ற மரபு வழியான கருத்துக்கள் இன்று மீளாய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் உறக்கம் பற்றிய உளவியல் ஆய்வுகளை விரிவாக நோக்க வேண்டியுள்ளது.

உறக்கத்தின் போது உடலியக்கம், மற்றும் புலன்சார் தொழிற்பாடுகள் ஓரளவு ஓய்வு நிலைக்கு உள்ளாகின்றன. ஆனால் மூளை இயங்கிய வண்ணமிருக்கும். இந்த ஓய்வுநிலை முக்கியத்துவத்தைத் தொல்குடியினர் தமது அறிகை வீச்சுக்குள் கொண்டுவந்திருந்தனர். அதன் விரிவாக்கமாக உறக்கத்துக்குரிய வரையும் உருவாக்கியிருந்தனர்.

- கிரேக்கர்கள் உறக்கக்கடவுளுக்கு 'ஹிப்னோஸ்' எனப் பெயரிட்டனர்.
- ரோமர்கள் உறக்கக் கடவுளுக்கு 'சொமான்' என்று பெயர் சூட்டினர். அவ்வாறு பெயரிடுதலுடன் மட்டும் ரோமர்கள் நின்றுவிடவில்லை. அவர்களது தொன்மங்கள் மேலும் விரிவடைந்து சென்றன. கனவுக்கு கடவுளாக 'மோர்பியஸ்' என்பவரைக் குறிப்பிட்டு அவர் உறக்கக் கடவுளின் ஆயிரம் புதல்வர்களுள் ஒருவர் என்றும் விபரித்தனர். உறக்கக் கடவுள் இறப்புக் கடவுளின் சகோதரர் என்றும் அவர்கள் இருவரும் இரவாகிய பெண் தெய்வத்தின் புதல்வர்கள் என்றும் ரோமர்களின் தொன்மங்கள் குறிப்பிடுகின்றன.

தமிழ் மரபில் "கண்வளர்தல்" என்ற ஆக்க நிலையான உறக்கம் குறிப்பிடப்பட்டது. அதாவது கற்றலுக்குரிய வளம் படுத்தக் கூடியதும், ஆக்க மலர்ச்சியைத் தூண்டக் கூடியதுமான "இங்கித உறக்கம்" கண்வளர்தலாயிற்று. பல ஊற்று அல்லது ஆக்கத்துக்கு எதிர்நிலையான உறக்கம் கண்துஞ்சல் எனப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நவீன கருவிகளைப் பயன்படுத்தி உறக்கம் பற்றிய ஆய்வுகள் மிக விரிவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறான ஆய்வுகளை அடியொற்றி இருவகையான பாகுபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவையாவன:

1. விரைந்த கண் அசைவுகளைக் கொண்ட உறக்கம் (RT.M)
2. விரைந்த கண் அசைவுகள் இடம் பெறாத உறக்கம் (NREM).

விரைந்த கண் அசைவுகளைக் கொண்ட உறக்கத்திலேதான் பெரும்பாலான கனவுகள் தோற்றம் பெறுகின்றன. கனவுகள் காண்பதில்லை என்று கூறுபவர்கள், தாம் அனுபவித்த கனவுகளை மீட்டெடுக்க முடியாத நிலையில் உள்ளனர் என்றே குறிப்பிடப்படுகின்றனர். விரைந்த கண் அசைவுகள் இடம் பெறாத தூக்கத்திலிருந்து விழித்தெழும் பொழுது கனவுகளை மீட்டெடுத்தல் கடினமாகின்றது. விரைந்த கண்ணசைவுகள் கொண்ட தூக்கத்தின் போது உடல் புறத்தூண்டிகள் கனவுகளின் உள்ளடக்கத்துடன் உள்ளீர்க்கப்பட்டு விடும்.

உடற்றொழிலியல் வல்லுனர்கள் உடலின் வெப்பம், மூளையின் மையம், இருதயத்துடிப்பு, குருதி அழுத்தம், உடல் நோய் போன்ற பலகாரணிகளுடன் தொடர்புபடுத்தி உறக்கத்தை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர். நரம்பியல் சார்ந்த இரசாயனவியல், நரம்பியல் ஊடுகடத்திகள் (Neurotransmitters) தொடர்பான ஆய்வுகள் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உறக்கத்தின் போது உடலியக்கம்,
மற்றும் புலன்சார் தொழிற்பாடுகள்
ஓரளவு ஓய்வு நிலைக்கு
உள்ளாகின்றன. ஆனால் மூளை
இயங்கிய வண்ணமிருக்கும்.
இந்த ஓய்வு நிலை
முக்கியத்துவத்தைத் தொல்குடியினர்
தமது அறிகை வீச்சுக்குள்
கொண்டுவந்திருந்தினர்.

அவற்றிலிருந்து முகிழ்த்தெழும் கண்டு பிடிப்புகள் உளவியலுக்கும் பயன்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

உறக்கத்தை உளவியலாளர் உளமட்டத்தின் குறியீடா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கொள்ளும். மகிழ்ச்சிகரமான கற்றலும், மகிழ்ச்சியான தூக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. உறக்கத்தை தொடர்ச்சியாகப் பெருமளவிலே நிராகரித்துக் கற்றலிலே தொடர்ந்து ஈடுபடும் பொழுது பல எதிர்விளைவுகள் தோன்றுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. உறக்கமே கொள்ளாது தொழிற்பாடுகளிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் ஏற்படுத்தும் வழுக்கள் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்று குறிப்பிடப்படுகின்றது.

யுத்த நெருக்கடி மற்றும் கற்கும் போது அதிக தண்டனைகளுக்கும் நெருக்குவாரங்களுக்கும் உள்ளாக்கப்படும் மாணவர்கள், அதிக உளநெருக்கீட்டுக்கு உள்ளாகும் மாணவர்களாக உள்ளார்கள். இவர்களிடம் உறக்கத்தின் போது கெட்டகனவுகளையும் பயம் மற்றும் பதகளிப்பை உருவாக்கும் கனவுகளையும் காண முடிகின்றது. அவற்றால் உறக்கத்துக்குப் போவதற்கே பயப்படும் நிலையைச் சிறார் எதிர் கொள்ள நேரிடுகின்றது. நல்ல கற்றலையும், நல்ல உறக்கத்தையும் ஆக்கி தருதலில் ஆசிரியரின் பங்கும் வகிபாகமும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

சிறார் பருவத்திலே தோற்றம் பெறும் "பயமூட்டற் கனவுகள்" (Nightmares) நடப்பியலையும், விநோதங்களையும் வேறுபடுத்த முடியாத அறிகைநிலையிலும் மனவெழுச்சி நிலையிலும் தெறிப்புக்களாகின்றன. ஆனால் வளர்ந்த நிலையிலும் ஒருவர் பயமூட்டற் கனவுகளைத் தொடர்ச்சியாகக் காண்பார்களாயின் அது பொருமளவிலான உளவியல் தாக்கங்களின் வெளிப்பாடுகள் என்றே கொள்ளப்படும். சீரிய நடவடிக்கைகள் அவர்களுக்கு உடனடியாக வேண்டப்படும்.

உறக்கம் பற்றிமேலும் விளங்கிக் கொள்வதற்கு விரைந்த கண் அசைவுகள் இடம் பெறா உறக்கத்தை நான்கு கட்டங்களாகப் பிரித்து ஆராய்கின்றனர். குழந்தைகளுக்கு முதல் இருகட்டங்களுமே பெருமளவில் இடம் பெறுகின்றன.

உறக்க அடிப்படையில் குழந்தைகளையும் வளர்ந்தோரையும் பண்புநிலையில் வேறுபடுத்துவது விரைந்த கண் அசைவுகள் இடம் பெறாத நிலையில் இடம் பெறும் மூன்றாம் நான்காம் கட்ட உறக்கங்களாகும். ஆனால் வயது மூப்படைந்து செல்ல ஒருவரது மூன்றாம் நான்காம் கட்ட உறக்கச் செயற்பாட்டிலே வீழ்ச்சி ஏற்படத் தொடங்கும். விரைந்த கண் அசைவுகள் இடம் பெறாத உறக்கத்திலே தான் குழந்தைகளும் அதிமுதிர்ச்சி அடைந்தவர்களும் "படுக்கையை நனைக்கும்" செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். படுக்கை நனைப்பு உடலியற் காரணிகளுடனும் உளவியற் காரணிகளுடனும் தொடர்புடையது. உறக்கத்தில் நடத்தல், உறக்கத்தில் ஆபத்தான செயல்களில் ஈடுபடல், கனவுகாணல் முதலியவை மேற்கூறிய மூன்றாம் நான்காம் கட்டங்களில் இடம் பெறும் செயல்களாகின்றன.



உளநலத்தைக் காப்பதற்கு உறக்கம் அவசியமாகின்றது. அது உளநலத்துக்கும் கற்பதற்குமுரிய உயிரியல் தேவைகளுள் ஒன்றாக அமைகின்றது. சிந்தனைத் தொழிற்பாட்டுக்குரிய வலுவை ஈட்டிக் கொள்வதற்கு பொருத்தமானதும் அளவானதுமான உறக்கம் அவசியம் வேண்டப்படுகின்றது. புதிதாகப் பிறந்த குழந்தைகள் ஒருநாளில் இருபது மணித்தியாலங்கள் வரை உறக்கம் கொள்கின்றன. நான்கு வயதுக்குழந்தை ஒரு நாளில் பதுமட்டாக பன்னிரண்டு மணித்தியாலங்கள் வரை உறங்குகின்றது. வளரவளர உறங்கும் நேர அளவு படிப்படியாகக் குறைவடைகின்றது.

ஒழுங்கமைந்த உறக்கக் கோலம் கற்பதற்கு அவசியமானது. மாணவர்கள் திட்டமிட்டு ஒழுங்கமைந்த உறக்கக் கோலத்தை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். உறக்கத்தின் போது உளம் சார்ந்த சில தொழிற்பாடுகள் மூளையிலே நிகழ்கின்றன. அந்தத் தொழிற்பாடுகளைக் கற்றலுடனும் பிரச்சினைவிடுவித்தலுடனும் இணைக்க முடியும். தீர்வுகள் எட்டப்படாத கற்றலுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உறக்கத்தின்போதும் உறக்கத்தின் பின்னரும் தீர்வுகள் கிடைக்கப் பெறுதல் உண்டு.

பரீட்சைக் காலங்களிலே நிகழும் கூடுதலான நேரக் கற்றல் திட்டமிடலும் உளத்திடத்துடனும் நிகழ்த்தப்படுவதால் முன்னரிலும் கூடுதலான நேரம் விழித்திருத்தல் உறக்க நிராகரிப்புப் பிரச்சினையைப் பொதுவாக உருவாக்குதல் இல்லையென்றே ஆய்வுகள் தெரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கின்றன. ஆனால் முழுமையாக உறக்கத்தைத் துறக்க நேர்ந்தால் உடல் மற்றும் உளம் சார்ந்த பிறழ்நிலைகள் ஏற்படும். பரீட்சைக் காலத்தில் ஓரளவேனும் உறங்குதலே சிறந்தது.


நீண்ட நேரம் கடினமான விடயங்களைக் கற்றபின்னர் மேலும் தொடர்ச்சியாகக் கற்பதைக் காட்டிலும், சிறிது உறக்கம் கொண்டு பின்னர் படிக்கத் தொடங்குதல் கற்றலுக்கும் நினைவிலே நிறுத்திக் கொள்வதற்கும் (Recention) பயன்படுத்துகின்றன.

மாணவர்கள் எந்தவளவு பாடசாலைக்குச் செல்கையில் இரு நாளில் உறக்கம் கொள்ளல் வேண்டும் என்பதற்கான திட்டவட்டமான முடிவுகள் ஆய்வுகள் வழியாக இன்னமும் பெறப்படவில்லை. ஆயினும் எழுமணி நேர உறக்கம் பொதுவான நியமமாக முன்வைக்கப்படுகின்றது. "உறங்கலைக் கற்றுக் கொள்ளல்" என்ற பொருள் பற்றியும் உளவியலிலே கூறப்படுகின்றது. அதாவது குறித்த நேரத்தில் அதனை ஆரம்பித்துக் குறித்த நேரத்தில் அதனை முடித்துக் கொள்ளப் பழக்கப்படும் பொழுது அதனை அடிப்படையாகக் கற்றலை உரிய முறையிலே திட்டமிட்டு ஒழுங்குபடுத்தலாம். கற்றலை பாதகமிழக்கு உள்ளான தாக்கமான செயலாக மாற்றும் பொழுது உறக்கமும் பாதிக்கப்படும், கற்றலும் பாதிக்கப்படும்.

கற்றலுக்கும், உறக்கத்துக்கும் கனவுகளுக்குமுள்ள தொடர்புகள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவற்றை அடியொற்றி எழுந்த கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- கற்றவற்றையும் நடப்பவற்றையும் கனவுகள் தெறித்துக் காட்டுகின்றன.
- விழிப்புள்ள நிலையின் நீட்சியாகவும் கற்றலின் நீட்சியாகவும் கனவுகள் தோற்றம் பெறுகின்றன.
- கனவுகளின் வழியாகக் காண்பவருக்குச் செய்திகள் வழங்கப்படுகின்றன.
- நனவிலிமனம் உறக்கத்திலே வெளிவிட்டுக் கொள்ளலும், நனவு மனம் அதனைக் கட்டுப்படுத்துதலும் என்ற முரண்பாடுகள் கருகலான, மங்கிய, திரிபடைந்த காட்சிகளைக் கனவுகளிலே தோன்றி நிற்கின்றன.
- வாழ்க்கை முரண்பாடுகளினதும் கற்றலின் போது நிகழும் தெரிந்தவற்றை மற்றும் தெரியாதவை என்ற முரண்பாடுகளினதும் தெறிப்புகள் கனவிலே இடம் பெறுகின்றன.

உறக்கமற்ற விழிப்பு நிலையிலும் கனவுகளைப் போன்ற காட்சிச் செயற்பாடுகள் (Dreamlike activities) சிலருக்கு ஏற்படுதல் உண்டு. அது கனவுகளின் விழிப்புநிலை நீட்சி என்று குறிப்பிடப்படும். அதாவது



விழிப்பு நிலை நடப்பியலின் நீட்சி கனவிலே இடம் பெறுதல் போன்று கனவின் நீட்சி நடப்பியலிலே இடம் பெறுதல் உண்டு.


உறக்கத்தின் போதும் கனவுகளின் போதும் இழப்புக்கள் ஈடுசெய்யப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் உரிய "தனியாள் ஆவணமாக" கனவு அமைகின்றது. அந்த ஆவணம் ஆளுமைப் பண்புக் கூறுகளுடன் இணைந்த ஆவணமாகின்றது. ஒவ்வொரு மாணவரிடத்தும் கனவுகள் பற்றி அறிந்து கொள்ளல் தவிர்க்க கற்பித்தற் செயற்பாட்டில் ஒரு தவிர்க்க முடியாத கூறாக முன்மொழியப்பட்டுள்ளது. மாணவரின் கனவுகளையும் அவர்களின் நடத்தைகளையும் ஒப்பு நோக்கும் செயற்பாடும் முக்கியமானதாக முன்மொழியப்பட்டுள்ளது.

"ஒருவர் கனவு காண்பதில்லை - கனவின் வழியான சிந்தனையே மேலெழுகின்றது" என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இக் கருத்து கற்றலுக்கும் கனவுக்கும், உறக்கத்துக்குமுள்ள தொடர்புகளை மேலும் புலப்படுத்துகின்றது.

கற்றல் என்பது சிந்தனை முறைமையிலும், நடத்தையிலும், உடல் உளவெளிப்பாடுகளிலும், உள்ளுணர்வுக் கற்பனைகளிலும் நிகழும் மாற்றமாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த மாற்றங்கள் நனவு நிலையில் மட்டும் நெறிப்படுத்தப்படுதல் இல்லை. உறக்க நிலையிலும் நெறிப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நிலையில் "உறக்கம் அறிகை உயர்வுக்கான ஏணி" என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்நிலையிலே சோம்பேறிகளின் உறக்கத்துக்கும், உற்சாகமுடையோரின் உறக்கத்துக்குமிடையே வேறுபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. சோம்பேறிகளின் நீண்ட உறக்கம் நேர அழிவாகவும், உற்சாகம் மிக்க கற்போரின் உறக்கம், ஆக்க நிகழ்வுக்குரிய முன்னெழுச்சியாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகமனவெழுச்சிசார் கற்றல் எதிர்காலத்திற்கான கல்வி

க.பரந்தாமன்

ஒவ்வொரு ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் சமூக உறுப்பினர்களிடமும் எல்லா பிள்ளைகள் பற்றிய கவனயீர்ப்பும் அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு பிள்ளை தாக்கப்படுவதோ அல்லது இம்சைக்குள்ளாக்கப்படுவதோ இன்னுமொரு பிள்ளையினாலேயேதான். எனவே நல்ல சமூக வாழ்க்கை என்பது ஒவ்வொரு பிள்ளையின் சமூக மனவெழுச்சிப் பண்பிலேயே தங்கியுள்ளது. ஆகவே ஒவ்வொரு பிள்ளை பற்றிய சமூகமனவெழுச்சி பற்றிய விழிப்புணர்வுகளும் மதிப்பீடும் வழிப்படுத்தலும் அவசியமாகின்றது.

(Prof.Lilian Katz)

**சமூக மனவெழுச்சிசார் கற்றல்:**

சில விடயங்கள் நமது வாழ்க்கைக்கு தேவையானது என்பதை ஒவ்வொரு குழந்தைக்கும் சொல்லாமலே புரிந்துகொள்ளக்கூடிய தன்மை காணப்படுகிறது. உதாரணமாக குழந்தை பிறந்தவுடன் பால் அருந்துவது, குழந்தையாக இருக்கும் போது பெரிய சத்தங்களைக் கேட்டு பயப்படுவது போன்ற செயற்பாடுகள் இயல்பாகவே காணப்படுகின்றன. இவை இயல்பிலேயே காணப்படும் இயல்பூக்கங்களாகக் கருதப்படுகின்றது. இவைதவிர உணவு தேடலூக்கம், தற்காப்பூக்கம், இனவிருத்தியூக்கம் (பாலியல்பருவங்களில்) போன்ற இயல்பூக்கங்களும் சமூகவூக்கம் - Social, குழுவூக்கம் - gregarious, விளையாட்டு – Play, பின்பற்றல் - Imitation, ஆராய்வூக்கம் - Curiosity, வெளிப்பாடு - Expression போன்ற உளப்போக்குகளும் பிள்ளைகளிடத்தில் இயல்பாகக் காணப்படுகின்றது. இயல்பூக்கங்களின் மாற்றங்களினாலும், தற்காப்பு போன்ற ஊக்கங்களினாலும் ஆரம்பத்தில் மக்கள் ஏதோவொரு விதி அடிப்படையில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழமுற்பட்டனர். இவையே பின்னர் சமூகம் பற்றிய சிந்தனைக்கு இட்டுச் சென்றது.

இவை தவிர மனிதரிடையே காணப்படும் மனவெழுச்சிகளும் (Emotions) நமக்குள்ளே தோன்றும் உணர்வுகளும் கற்றலிலே பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. மனவெழுச்சிகளை மூன்று வகைக்குள் அடக்கலாம்.

- நன்னைப்பாதிக்கும் மனவெழுச்சிகள்

இவற்றைத் தன்மைய எழுச்சிகள் எனலாம். தன் மதிப்பு, சுயபாசம், அச்சம், சுயகௌரவம், சினம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- பிறரைப்பாதிக்கும் மனவெழுச்சிகள்:

இரக்கம், அன்பு, கூட்டுப்பற்று, தோழமை நட்பு ஆகியவை இவ்வகையைச் சார்ந்தவை.

- சிந்தனை சார்ந்த மனவெழுச்சிகள்.

இவ்வெழுச்சிகள் மனிதனின் சூழ்நிலையையும் கல்வியையும் பெரிதும் சார்ந்தவை. இவை தனி மனிதர்களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படும்.

அண்மையில் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்ட விடயமொன்றை இங்கு குறிப்பிடவேண்டிய தேவையொன்றுள்ளது. இன்றைய காலத்தில் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், பதிப்பகங்கள் மற்றும் பத்திரிகைகள் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான மூலங்களாகச் செயலாற்ற வேண்டிய தேவையுள்ளது எனக் குறிப்பிட்டார். இவற்றின் செயலாற்றுகைகளில் தூரநோக்கும் தரிசனப்பார்வையும் கொண்ட செயற்பாடுகள் விரைவுபடுத்த வேண்டிய தேவையை சுட்டி நிற்கின்றன. அவ்வகையில் பல்கலைக்கழகங்களும், பாடசாலைகளும் கற்றல் மூலங்கள் மூலமும், கல்வி செயற்பாடுகள் மூலமும் எல்லா வகையிலான பண்புசார் விருத்திக்கும் அவ்மாணவரிடம் காணப்படும் சமூகவியற் பண்புகளையும் மனவெழுச்சிகளையும் நேர்வகையிலான சிந்தனைக்குட்படுத்தி வழிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இன்று பாடசாலைகளின் முன்னுள்ள பணிகளில் பின்வருவனவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

- பாடசாலைகள் சமூகத்திலிருந்து விடுபட்டு அந்நியமாதல் என்ற நிலையிலிருந்து பாடசாலைகளும், கல்விச் சமூகத்தினரும், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எல்லோரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வையான மாணவர் சமுதாய விருத்திக்கு செயலாற்றுதல்
- எல்லாமாணவர்களும் செயலுறுநிலையிலிருந்து, சுய விழிப்புணர்வு, சுய அவதானம், சுய புரிதல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அடிப்படையில் மற்றவர்களுடனான அறிகைப்பகிர்வுடன் செயலாற்றி பொறுப்புவாய்ந்த தீர்மானமெடுப்பவராக நிலைமாற்றம் பெறுவதற்கு உதவிசெய்தல்.

- ஒவ்வொரு மாணவரும் தமது உச்சநிலையை அடைவதற்காக பங்குபற்றுவதுடன் கூடிய நற்பிரஜையை சமூகத்திற்கு உருவாக்கக்கூடிய செயன்முறைகளை கற்றல் கற்பித்தல் முறைகளினூடு அறிமுகப்படுத்துதல்.

இதனடிப்படையில் அதிகாலத்திற்கான கல்வியாக சமூக மனவெழுச்சிசார் கற்றல் என்பது மற்றவர்கள் தமது அடிப்படை சமூக மனவெழுச்சிப் பரிமாணங்களைச் சுய விழிப்புணர்வு, சுய முகாமைத்துவம், சமூக விழிப்புணர்வு, தொடர்பாடல் - படிமுறைத் தொடர்புத்திறன், பொறுப்புக்கூறும் பண்பு, மற்றும் தீர்மானமெடுத்தல் செயற்பாடுகள் போன்றவற்றின் செயல் முறைகளைக் குறிப்பிடலாம்.

அதாவது:

**சமூக மனவெழுச்சிசார் கற்றல் என்பதை பின்வரும் அடிப்படையில் நோக்கலாம்**

சமூக மனவெழுச்சிசார் கற்றல்

கற்றல் சூழல் + சமூக மனவெழுச்சித் திறன்கள் = நேர் வெளியீடு

Learning Enviroment + Social & Emotional Skills = Positive Outcomes

**மனவெழுச்சிப்பண்புகளும் கோலங்களும்:**

- சுய விழிப்புணர்வு

ஒருவர் தனது மனவெழுச்சிகளையும், விழுமியங்களையும் அறிந்துகொள்ளுதல்.

தனது இயலுமைகளையும், தடைகளையும் உணர்ந்துகொள்ளுதல்

தான் பற்றிய சுய நம்பிக்கையைப் புரிந்துகொள்ளுதல்

சுய விளைதிறன் - தன்னைப் பற்றிய உணர்வுகள்

- சமூக விழிப்புணர்வு

சுய சமூகவியல் நடத்தைகள் தொடர்பான ஒழுக்கவியல் கட்டுமானச் செயன்முறைகள்

ஒத்துணர்வு, கேட்டல் திறன்கள், மாறுபட்ட ஊக்குவிக்கும் திறன்கள், நேர்வான கண்ணோட்டம்.

- தொடர்பு படிமுறை உறவுத்திறன்

உடன்பாடான தொடர்புகளை உருவாக்குதல், குழுவாகச் செயற்படுதல், வினைத்திறனுள்ள வகையில் கையாளுதல்.

தொடர்புறுத்தல், கலந்துரையாடி முடிவுக்கு வருதல், முரண்பாடுகளை தீர்த்தல், நிராகரிக்கும் ஆற்றல், உதவிகளைப் பெற்றுக்கொள்ளலும் வழங்குதலும்



- தீர்மானமெடுத்தலில் பொறுப்பாண்மை

சுய சமூகவியல் நடத்தைகள் தொடர்பான ஒழுக்கவியல் கட்டுமானச் செயன்முறைகள்சார் பிரச்சினைகளை இனங்காணல் - சூழ்நிலைசார் பகுப்பாய்வு - பிரச்சினை தீர்த்தல் - மதிப்பீடு - பிரதிபலிப்பு, சுய பொறுப்புணர்வு, விழுமியங்கள் தொடர்பான சமூக பொறுப்புணர்வு.

- சுய முகாமைத்துவம்

இலக்கை அடைவதற்காக மனவெழுச்சிகளையும், நடத்தைகளையும் முகாமை செய்தல்.

ஆசைகளைக் கட்டுப்படுத்தல்

மனவழுத்தம், உணர்ச்சிவசப்படுதலை முகாமைசெய்தல்

சுய ஊக்குவிப்பும், ஒழுக்கவியலும்

இலக்கைத் தீர்மானித்தல்

ஒழுங்குபடுத்தல் திறன்கள்

சமூக மனவெழுச்சிசார் கற்றல் தொடர்பாக ஆய்வு செய்த Colmens என்பவரின் கருத்துப்படி சமூகமனவெழுச்சிசார் திறன்களை விருத்திசெய்வதன் மூலம் மாணவருக்கு குறுகியகாலத்திலும் நீண்டகாலத்திலும் பயன்தரக்கூடிய செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக அமையும் எனக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் கற்றலை அதிகரிக்கலாம் எனக் குறிப்பிடுகின்றார். Zins, Bloodworth, Weissberg, Wahlberg, 2004 ஆகியோரின் ஆய்வில் குறிப்பிட்டதன்படி சமூக மனவெழுச்சிசார் பண்புகள் தொடர்பான விழிப்புணர்வு, அறிகை மற்றும் பயிற்சி என்பன கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் அடிப்படைகளாகக் குறிப்பிடப்படுகின்றது.

Dr. Maurice Elias என்ற அமெரிக்கப்பல்கலைக்கழக பிரபல குழந்தை உளவியலாளரின் ஆய்வில் பெறப்பட்ட முடிவுகள் எமது கல்விப்பின்புலத்திற்கும் தற்போது மிகப்பொருத்தமானதாகக் கருதப்படலாம். அவரின் ஆய்வின் முடிவுகளில் குறிப்பிட்டதன் படி சமூக மனவெழுச்சிசார் செயற்பாடுகளை பாட-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளில் இருந்து ஒதுக்குவது எதிர்காலத்தில் பயங்கரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் எனக் குறிப்பிடுகின்றார். பாடசாலைகளில் காணப்படும் வேண்டத்தகாத செயற்பாடுகளுக்கு, குறிப்பாக மற்றைய மாணவர்களுடனான முரண்பாடுகள், அமைதியாக இருந்து படிக்கமுடியாமை மற்றும் நெறிபிறழ்வான நடத்தைக் கோலங்களிற்கு சமூக மனவெழுச்சி தொடர்பான உளப்பிரச்சினைகளே காரணமாக அமைகின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இன்று பெரும்பாலான வடக்கு கிழக்கு மாணவர்கள் ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டு அல்லது மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கு உட்பட்டே காணப்படுகின்றனர். இந்நிலையில் இவற்றை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஆசிரியர் கல்விச் சமூகத்திலுள்ளோர் தம்மை உத்வேகத்துடன் தயார்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சாதாரண கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் புறம்பான சமூக மனவெழுச்சிசார் பண்புகளை கற்றல் செயற்பாடுகள் மூலம் எவ்வாறு முகாமை செய்யலாம் என்பது தொடர்பான செயற்பாடுகள் இம்மாணவர்கள் விடயத்தில் கவனம் கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லா நிலை காணப்படும் போது விரக்திக்குள்ளாகும், நெறிபிறழும் சமூக உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க சந்தர்ப்பம் ஏற்படும்.

பாடசாலைகள் சமூகமனவெழுச்சிசார் தேர்ச்சிகளை தமது அன்றாட கற்றல் கற்பித்தல், கலைத்திட்ட விருத்திச் செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளும் போது மாணவர் பெற்றோர் சமூக உறுப்பினர்களையும் உள்வாங்குதல் அவசியமாகும். குறிப்பாக வேலை அமர்வுகள், கருத்தரங்குகள், கட்டமைப்படுத்தப்பட்ட கற்றல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் இவ்விலக்கினை இலகுவாக அடையலாம். இது தொடர்பில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றவர்களிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய பண்புக்கோலங்கள் சில கீழே குறிப்பிடப்படுகின்றது.

**ஆசிரியர்களுக்கான சில ஆலோசனைகள்:**

- தினசரி கலைத்திட்ட விருத்திச் செயற்பாடுகளுடன் சமூக மனவெழுச்சிசார் செயற்பாடுகளை ஒன்றிணைத்தல்.
- மாணவரிடையே காணப்படும் மனவெழுச்சிசார் நுண்மதிகளையும் சமூக ஆர்வப் பண்புகளையும் வெளிப்படுத்தல், அவற்றை ஊக்குவித்தல்.
- சமூகச் செயற்பாடுகளில் தீர்மானமெடுத்தல், பிரச்சினை தீர்த்தல், முரண்பாடு தீர்த்தல், புத்தாக்க நிகழ்வுகள் போன்ற சமூக மனவெழுச்சிசார் செயற்பாடுகளை மாணவரிடையே அறிமுகம் செய்தல்.
- நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பாவித்து இப்பண்புகள் எளிதாக மாணவரைச் சென்றடையக்கூடிய நுட்பங்களைப் பாவித்தல். உதாரணமாக கணினி விளையாட்டுக்கள், காணொளிப்படங்கள், புதிர்கள்.



- வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவரிடம் மனவெழுச்சிப்பண்புகள் தொடர்பான எதிர்விளைவுகள் ஏற்படுகின்றதா என்பதை கண்காணித்தல்.
- வகுப்பறையில் மனவெழுச்சித் தேர்ச்சிகளை உணர்ந்து பிரதிபலிக்கக் கூடிய வகையில் சொற்றொடர்களை காட்சிப்படுத்தல். அத்துடன் மாணவர்களிடம் ஏற்படக்கூடிய சிறிய சிறிய பிரச்சினைகளுக்கான நேர்வகைத் தீர்வுகளும்.
- சமூக மனவெழுச்சிப்பிரச்சினைகள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பான தரவட்டங்களை அமைத்து பாடசாலை மட்டத்தில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.
- சமூக மனவெழுச்சிப்பிரச்சினைகள் தொடர்பான மாநாடு, கருத்தரங்கு, கற்கை வட்டங்கள் வேலையமர்வுகளில் பங்குகொள்ளல்.
- சமூக மனவெழுச்சிப்பிரச்சினைகள் தொடர்பான பிரதிபலிப்பு நாளேடு அல்லது செயலட்டைக் கோவையொன்றை ஆசிரியர் பேணுதல்.
- சமூக மனவெழுச்சிப்பிரச்சினைகள் தொடர்பான புத்தகங்கள், கட்டுரைகள், இணையத்தள வளங்கள் போன்றவற்றில் தேடல்களை மேற்கொண்டு கற்றலை மேம்படுத்திக் கொள்ளல்.

**மாணவர்களுக்கான சில ஆலோசனைகள்:**

- சுயவிழிப்புணர்வு, சுய பிரதிபலிப்புத் தொடர்பான நாளேடு ஒன்றைப் பேணுதல்
- ஒவ்வொரு மாணவரும் தன்னைப் பற்றிய (சுய) விமர்சனம் செய்துகொள்ளல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக சகபாடிகளின் தரிசன நோக்குகளை பாராட்டுதல் அல்லது ஊக்குவித்தல்.
- எதிர்நிலையான மனநிலைகளை எவ்வாறு அல்லது என்ன நுட்பங்களைப்பாவித்து நேர்நிலைக்கு கொணர்தல் என்பது பற்றிய அவதானங்களை மேற்கொள்ளல்.
- மனநிலையை குழப்பக்கூடிய சந்தர்ப்பங்களை விடயங்களை இயலுமானவரை தவிர்த்தல் அல்லது அதுபற்றி விழிப்பாக இருத்தல்.

**பெற்றோர்களுக்கான சில ஆலோசனைகள்:**

- சகபாடிகளுடன் ஒத்துழைத்து, கூட்டுச் சேர்ந்து அதே செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் கண்டுபிடித்தல்.
- உமது செயற்பாடுகள் தொடர்பான சகபாடிகளின் கருத்துக்களை செவிமடுத்தல். சிந்தனைக்கு உள்ளாக்குதல்.
- பிரச்சினைகள் தொடர்பான ஆள்மன சிந்தனைகளுக்கும், சமூக மனவெழுச்சி சாரா தேவைகள் தொடர்பாகவும் கருத்திலெடுத்தல்.
- குழந்தைப்பருவத்தில் பெற்றோர்களே மனவெழுச்சிசார் விடயங்களில் பிள்ளைகளுடன் அதிகம் ஈடுபாடுகொண்டவர்கள். எனவே குழந்தைப்பருவத்தில் இவ் மனவெழுச்சிகளை கையாள்வதில் பெற்றோர்கள் அதிக சிரத்தை எடுத்தல் அவசியமாகின்றது.
- மனவெழுச்சிகளை கையாள்வதில் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், வெற்றிகள் தொடர்பான தேடலும் பகிர்தலும் அவசியமகின்றது. குறிப்பாக மற்றைய பெற்றோர்களுடனும், ஆசிரியர்களுடனும் சமூக நிறுவனங்கள், பிள்ளை தொடர்புற்றிருக்கும் மத நிறுவனத் தலைவர்கள் போன்றோருடன் பெற்றோர் கருத்தாடல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- சமூக மனவெழுச்சிசார் நடத்தைகளுக்கான மாதிரி நடிபங்குகளை பிள்ளைகளுக்கு பெற்றோர் அறிமுகஞ் செய்தும் அல்லது பின்பற்ற வழிப்படுத்தல் வேண்டும்.
- மனவெழுச்சிகள், உணர்வுகள் உடன்பாடான மன வெழுச்சி தொடர்பான கதைகள் கட்டுரைகள் விளையாட்டுக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் பற்றிய வழிப்படுத்தல்கள்.

இன்று தமிழர் கல்விப்பாரம்பரியத்தில் பல்வேறுபட்ட நுட்பங்களையும் முறைகளையும் மேற்கொண்டு மாணவர்களுக்கு கல்வி புகட்டவேண்டிய தேவை உள்ளது. வெறுமனே அறிவியல் ரீதியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் பண்புரீதியான விழுமியங்கள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். அவ்வாறான முன்முயற்சிகள் விரைவுபடுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. இதற்கு கல்வியியல் சார் புதிய எண்ணக்கருக்களும் புத்தாக்கச் சிந்தனைகளும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இம்முயற்சியில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், பதிப்பகங்கள் மற்றும் பத்திரிகைகள் மற்றும் கல்வி மான்களும், கல்வி ஆர்வலர்களும், சமூக ஆர்வலர்களும், கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான மூலங்களாகச் செயலாற்றவேண்டிய தேவையுள்ளது.




**வரைபு - 1 ஆளுமை விருத்தியில் பரஸ்பர செல்வாக்கு**

*("வழிகாட்டலும் ஆலோசனையும்", விமலா கிருஷ்ணபிள்ளை பக்:31)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரும் ஆய்வாளர் வகிபாகமும்

கி. புண்ணியமூர்த்தி

நாம் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டதிலிருந்து தினமும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகிறோம். அப்பிரச்சினைகளுக்கு நம்மில் பலர் இலகுவாகத் தீர்வுகளைக் காண்கிறோம். சிலர் தீர்வு காண முடியாமல் தவிக்கிறோம். சிலர் பிரச்சினையையே விளங்கிக் கொள்ள முடியாமல் குழம்புகிறோம். அவ்வாறான பிரச்சினைகளில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

1. உங்கள் வகுப்புக்கு அருகேயுள்ள வகுப்பாசிரியர் வராததால் அவ்வகுப்பு குழப்பம் மிகுந்ததாக இருக்கலாம். மாணவர்கள் கூச்சலிடலாம். உங்களால் உங்கள் வகுப்பை நடாத்திச் செல்ல முடியாமலிருக்கலாம். உங்கள் மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் அவ் வகுப்புக்குச் சென்று கூச்சலிடும் ஓரிரு மாணவர்களுக்குத் தண்டனையை வழங்கி அமைதியாக இருக்குமாறு சத்தமிட்டுவிட்டு மீண்டும் உங்கள் வகுப்புக்குத் திரும்பி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் தொடரலாம். அல்லது வகுப்புத் தலைவரை, குழப்பவர்களைப் பற்றி உங்களிடம் வந்து தெரிவிக்குமாறு பணிக்கலாம் அல்லது ஏதாவது ஒப்படைகளை வழங்கி அமைதியாக இருந்து அதனைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

2. சில பாடங்களைக் கற்பிக்கும் போது அவற்றை எவ்வாறான கற்பித்தல் முறைகளைப் பிரயோகித்துக் கற்பிக்கலாம் என்பதில் நமக்குப் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாம். மாணவர்களின் வயதுமட்டம், அறிவு மட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கான எல்லைகளை எவ்வாறு வகுக்கலாம் என்பதில் நமக்குப் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறலாம். உதாரணமாக தரம் ஏழு(7) வரலாற்றுப் பாடத்தில் 3ம் அலகான அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும், தென்னிந்திய ஆக்கிரமிப்பும் என்னும் அலகை எடுத்துக் கொண்டால் இவ் அலகில் கற்பிக்கக்கூடிய எல்லை தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறலாம். குறிப்பாக,

சில பாடங்களைக்
கற்பிக்கும் போது
அவற்றை
எவ்வாறான கற்பித்தல்
முறைகளைப் பிரயோகித்துக்
கற்பிக்கலாம் என்பதில்
நமக்குப் பல்வேறு
பிரச்சினைகள் தோன்றலாம்.

- இவை தொடர்பாக எவ்வெவ் வரலாற்று மூலகங்களைப் பயன்படுத்துவது?
- அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சிக்காக மாணவர்களுக்குச் சமர்ப்பிக்கக்கூடிய காரணங்களின் எண்ணிக்கை யாது?
- அநுராதபுர இராசதானியில் செல்வாக்குச் செலுத்திய தென்னிந்திய அரசர்கள் தொடர்பான எவ்வெவ் விபரங்களை மாணவர்களுக்கு வழங்குவது?
- அநுராதபுர காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து படையுதவி பெற்ற மன்னர்களின் எண்ணிக்கை யாது?
- அக்காலத்தில் தென்னிந்தியாவுடனிருந்த அரசியல், சமய கலாசார, பொருளாதார தொடர்புகள் பற்றி எந்தளவிற்குக் கற்பிப்பது

இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரு ஆசிரியர் எவ்வாறு தீர்வு காணலாம். ஆசிரிய ஆலோசகர்களிடம் வினவலாமா? அல்லது வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஏனைய சிரேஷ்ட ஆசிரியர்களிடம் வினவலாமா? அல்லது பாடவிதான அபிவிருத்தியுடன் தொடர்புடையவர்களிடம் கேட்டறியலாமா?

3. தரம் மூன்றில் கற்பிக்கும் ஒரு ஆசிரியையின் பிரச்சினை இது. தரம் மூன்றிற்கு ஆங்கில பாடத்தைக் கற்பித்த ஆசிரியை நீண்ட பிரசவ விடுமுறையில் இருக்கிறார். அதனால் தரம் மூன்றிற்குப் பல நாட்களாக ஆங்கிலம் கற்பிப்பிக்கப்படவில்லை. வகுப்பாசிரியையான அவர் இது பற்றி அதிபரிடம் தெரிவித்த போது அவர் "ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அதற்கென ஒரு ஆசிரியரை நியமிக்க முடியாமலுள்ளது. தரம் மூன்று சிறிய வகுப்புத்தானே, அதற்குரியது இலகுவான ஆங்கிலம் தானே. அதனால் நீங்களே

அந்தப் பாடத்தைக் கற்பியுங்கள்" என்று கூறி விட்டார். இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஆசிரியையால் அதிபரின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் நாம் முன்னிற்று ஆங்கிலம் கற்பிப்பதற்குரியவரிற்குத் தனக்கு ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய தகைமை இல்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதற்குக் கூச்சமாக இருந்தது. இப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பதென்பது தெரியாமல் ஆசிரியர் தடுமாறும் நிலை ஏற்பட்டது. பதில் கடமையாற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது இவ்வாறான பிரச்சினைகள் தோற்றம் பெறுவது இயல்பான ஒன்றாகும்.

4. உங்கள் வகுப்பை விட்டுப் பக்கத்து வகுப்பில் வழக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கே உங்களால் முடியாமலிருக்கலாம். இப் பிரச்சினை அல்லது இவை போன்ற பிரச்சினைகள் தினமும் வகுப்பறைகளில் அல்லது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது ஏற்படும் பிரச்சினைகள்தான்.

இப் பிரச்சினைகள் பற்றி

- உங்களில் எத்தனைபேர் குறிப்புகளை வைத்துள்ளீர்கள்?
- உங்களில் எத்தனைபேர் அறிக்கைகளைப் பெறுகிறீர்கள்.
- உங்களில் எத்தனைபேர் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான மேலதிக தகவல்களைத் திரட்டுகிறீர்கள்
- உங்களில் எத்தனைபேர் அந்த அனுபவங்கள் தொடர்பான பகுப்பாய்வுகளை மேற்கொள்கிறீர்கள்.

அவ்வாறு நீங்கள் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்பவர்களாக இருந்தால் நீங்கள் ஒரு ஆய்வாளர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பறையில் இடம் பெறும் சம்பவங்களை, அல்லது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தமது கற்பித்தல் முறையியல்களை மாற்றியமைப்பர். ஆனால் நம்மில் எத்தனை பேர் அவ்வாறான சம்பவங்களை அல்லது அனுபவங்களை அறிக்கைப்படுத்துகிறோம். வேறு ஆசிரியர்களின் பயன்பாட்டுக்காகவாவது நாம் பிரயோகித்த முறையியல்களை ஏதாவது கூட்டங்களில் அல்லது செயலமர்வுகளில் முன்வைத்திருக்கிறோமா? ஆகக் குறைந்தது ஆசிரியர் கூட்டங்களிலாவது வெளிப்படுத்தியிருக்கிறோமா? குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைத் திரட்டியிருக்கிறோமா?

அவ்வாறான செயற்பாடுகளில் நம்மில் யாராவது ஈடுபட்டிருந்தால் நாமும் ஆய்வாளர்கள் என்று நம்மைக் கூறிக் கொள்வதில் யாதொரு பிழையுமில்லை.



நாம் கல்விமாணிப் பட்டத்தில் அல்லது பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவில் அல்லது முதுமாணிப் பட்டத்தில்தான் ஆய்வைப் பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. நாம் தினமும் வகுப்பறைகளில் ஆய்வாளராகவே செயற்படுகிறோம். ஆனால் முறைப்படி ஒரு ஆய்வை எவ்வாறு மேற்கொள்வது, எவ்வாறு அதனை அறிக்கைப்படுத்துவது என்பதைச் சுயமாகவே கற்றுக் கொள்வது ஆசிரியர்களாகிய நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆய்வைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் போதுமான மூலாதாரங்கள் பற்றாக்குறையாகவேயுள்ளன. அதிலும் தமிழ் மொழியில் மிகவும் குறைந்தளவான நூல்களே கிடைக்கக்கூடியதாகவுள்ளது.


இக் கட்டுரையில் ஆய்வைப் பற்றிய அடிப்படை அம்சங்கள் பற்றிய சிறிய விளக்கங்களைத் தரலாம் என விரும்புகிறேன். எந்தவொரு ஆசிரியருக்கும் தமது வகுப்பறையில் அல்லது பாடசாலையில் உருவாகும் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். எனினும் அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களை அடிப்படை நிலை ஆய்வாளர்கள் ஆரம்பக் கட்டங்களில் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும்.

இதுவரை இலங்கையில் எத்தனை ஆசிரியர்கள் கல்வி ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார்கள்? அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆய்வுகள் தொடர்பாக அறிக்கைப்படுத்தியுள்ளார்கள். அவ்வாறான ஆய்வு முடிவுகள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காகக் கல்வியியலாளர்களால் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஆய்வுகளில் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் தகவல்களைத் திரட்டிப் பகுப்பாய்வு செய்து ஆய்வாளராகத் தொழிற்பட்டுள்ளனர். நீங்கள் ஏன் இவ்வாறான முயற்சிகளில் இறங்கக்கூடாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பிரதேசப் பாடசாலை வகுப்பறை ஒன்றில் இடம்பெற்ற மேலும் ஒரு பிரச்சினை பற்றிப் பார்ப்போம். ஒரு ஆசிரியை இடமாற்றம் பெற்று ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்குச் சென்றுள்ளார். அவருக்கு அப் பாடசாலையில் தரம் ஐந்து பொறுப்பாக வழங்கப்பட்டது. சில நாட்களிலேயே தனது வகுப்பறையில் இருந்த சுரேஸ் என்னும் மாணவனை அவனது நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு அவன் பிரச்சினையான மாணவன் என்பதை அவர் இனங்கண்டுள்ளார். ஏனைய மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றுக் கொண்ட தரவுகளுக்கமைய அவனுக்குப் பாடசாலையில் "கள்ளன்", "விசரன்" "உருப்படான்" என்ற பட்டப் பெயர்கள் இடப்பட்டிருந்தமையும் அறிந்து கொண்டார்.



சுரேஸைப் பற்றி மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியருக்குத் தோன்றியது. அதற்காக சுரேசின் பெற்றோரைச் சந்திப்பதற்காக, அவனது வீடு செல்வதற்காக, சுரேசுடன் தொடர்பு கொண்ட சிலரிடம் விசாரித்த போது இன்னும் சில தகவல்களைப் பெறக்கூடியதாகவிருந்தது. இவ்வாறு சுரேசைப் பற்றி விசாரித்த தினத்திற்கு மறுநாள் சுரேசின் தாய் ஆசிரியையைச் சந்தித்துப் பின்வருமாறு கூறினார். "ஐயோ ரீச்சர் எனக்கு எப்பிடியெண்டாலும் எனது பிள்ளையைத் திருத்திக் கொடுங்கோ. எனக்கு உள்ளதே ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளைதான். நானும் அவனும் மட்டும்தான் வீட்டில இருக்கிறம். அவன்ர அப்பா எங்களை விட்டுட்டுப் போயிற்றாரு" என்றவாறே கண்கலங்கிய சுரேசின் தாய், "ரீச்சர நான் என்னவாவது அவனிட்ட சொன்னா உடனேயே கோபம் வந்து கையில கிடைக்கிறது எடுத்து எனக்கு எறிவான். சில நாளுகளுக்குள்ள காயம்கூட வந்திருக்கு. நான் சொல்ற எதையுமே அவன் கேட்கிறதில்ல. இன்றைக்குப் போடுற உடுப்புத்தான் நாளைக்கும் போடுவான், இப்ப ஸ்கூலுக்கு வாறது கூட பல்லுத் தீட்டாமத்தான் ரீச்சர்" என்றார்.

சுரேசின் வீட்டுச் சுற்றாடல், பாடசாலைச் சுற்றாடல் தொடர்பாகக் கவனத்தில் கொண்ட ஆசிரியை சுரேசை மனிதாபிமானத்துடனும் வேறு நுட்பமுறைகளைப் பயன்படுத்தியும் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்க முயற்சி செய்தார். உதாரணமாக அவர் சுரேசுக்குப் பல் விளக்காததால் ஏற்படும் பாதிப்புகள், நோய்கள் குறித்தும் விளக்கமளித்தார். அதன் பலனாக சுரேஸ் பல் விளக்கிப் பாடசாலைக்கு வருவதற்குப் பழகிக் கொண்டான். சுரேஸ் தொடர்பாக ஆசிரியர் செலுத்திய விசேட கவனம் காரணமாக அவன் ஆசிரியர்மீது நம்பிக்கையை வளர்த்துக் கொண்டான். அந்த நம்பிக்கை சுரேசிடம் நடத்தை மாற்றங்களைத் தோற்றுவித்தது.

> *சில நாட்களிலேயே தனது வகுப்பறையில் இருந்த சுரேஸ் என்னும் மாணவனை அவனது நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு அவன் பிரச்சினையான மாணவன் என்பதை அவர் இனங்கண்டுள்ளார்.*

பாடசாலையில் இடம்பெறும் அனைத்துத் திருட்டுச் சம்பவங்களுக்கும் சுரேசைத் தொடர்புபடுத்துவது மாணவர்களதும் ஆசிரியர்களதும் பழக்கமாகும். ஒரு நாள் வகுப்பில் ஒரு மாணவனின் திறப் பெட்டி தொலைந்த சந்தர்ப்பத்தில் வகுப்பிலுள்ள அனைவரும் சுரேசைச் சந்தேகப்பட்டபோது, சுரேஸ் ஆசிரியையிடம் வந்து இவ்வாறு கூறினான், "ஐயோ ரீச்சர் என்னைக் காப்பாத்துங்க, சத்தியமா நான் கலர்ப் பெட்டியை களவெடுக்கவேயில்லை. ரீச்சர் நான் ஒவ்வொருநாளும் வீட்டுக்குப் போய் அம்மாட்ட என்ன இந்தப் பள்ளியிலிருந்து விலக்கி வேற ஏதாவது பள்ளியில சேர்த்துவிடச் சொல்லி கேட்கிறநான். நீங்களெண்டாலும் என்ன வேற பள்ளியில சேர்த்துவிடுங்க ரீச்சர். எனக்கு இங்க படிக்கவே ஏலாது. இந்தப் பள்ளியும் இங்க இருக்கிற ஆக்களும் எனக்குப் பிடிக்கவேயில்லை" என்று கூறி சுரேஸ் தேம்பித் தேம்பி அழுதான்.

சுரேசின் இந்த வெளிப்பாட்டிலிருந்து தான் செய்யாத செயற்பாடுகளுக்குரிய பழியையும் தானே சுமப்பதன் காரணத்தால் அவனுக்குப் பாடசாலையே வெறுத்துவிட்டது. திறப் பெட்டியை ஆசிரியை வகுப்பறையில் தேடியபோது அது குப்பைக்கூடைக்குப் பின்னால் கிடந்தமை தெரிய வந்தது. அதன் பின் ஆசிரியை வகுப்பிலுள்ள மாணவர்களிடம் சுரேசைப் பற்றி நல்லபடியாக எடுத்துக்கூறி அவனுடன் நட்பு வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்ச்சியாக ஆசிரியை மேற்கொண்ட பரிகார நடவடிக்கைகளின் காரணமாக அவனிடம் விரைவாக நல்ல மாற்றங்கள் தோற்றம் பெறுவதைக் கண்டு கொண்டார். கற்பிக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் கற்றாடல், நடத்தைக் கோலங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமானது என்பதைத் தான் புரிந்து கொண்டதாக சுரேசின் ஆசிரியை தெரிவித்தார். அது தவிர மாணவர்களை இனங்காண்பதன் முக்கியத்துவத்தைத் தான் முற்பாகவே அறிந்திருந்தால் சுரேசை அவனது ஆரம்பக் கட்டங்களிலேயே திருத்தியிருக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக வகுப்பறைக்குச் சென்று மாணவர்களை அமைதிப்படுத்தி நமது கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதும், பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதும், மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதுமே நமது பிரதான குறிக்கோள்களாகவுள்ளன. மாணவர்களின் நடத்தைக் கோலங்கள், அவர்களது கற்றாடல், அவர்களது பலங்கள், பலவீனங்கள் என்பன பற்றிக் கவனத்தில் கொள்வது குறைவாகவேயுள்ளது. ஒரு ஆசிரியர் ஆய்வு முறையியல்கள் பற்றிக் கற்றுத் தெரிந்திருந்தால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகவும் சிறப்பாகத் தொழிற்படக்கூடியதாகவிருக்கும்.

நான் இதுவரை உங்களுக்கு முன்வைத்தது சுரேஸ் தொடர்பான தனியாள் ஆய்வாகும். (Case Study) தனியாள் ஆய்வு என்பது தனியொருவர் அல்லது ஒரு நிகழ்வு அல்லது ஒரு இடம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விபரமான ஆய்வாகும். இவ் ஆய்வு ஆய்வாளரால் சமூகக் கற்றாடல் தொடர்பாக அவதானம் மூலம் அல்லது நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

சுரேஸ் தொடர்பாகப் பார்த்தால் ஆசிரியையே பிரச்சினையைத் தெரிவு செய்து அதற்குத் தீர்வு காணும் பொருட்டு தொடர்ச்சியாக ஆய்வினை மேற்கொண்ட காரணத்தால் அந் நபியயாள் ஆய்வினைச் செயல்நிலை ஆய்வாகவே (Action Research) கொள்ள முடியும்.

பல ஆசிரியர்கள் தமது வகுப்பறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் அவதியுறுவதை நடைமுறையில் அவதானிக்க முடிகிறது. இதற்குச் சிலரது பின்வரும் கூற்றுக்களை உதாரணமாகக் கொள்ள முடியும்.

- என்னால் இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் போல் இருக்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை.
- நான் கற்பிக்கும் முறை எனக்கே திருப்தியாக இல்லை. எப்படி நான் எனது கற்பித்தல் முறையை மாற்றியமைப்பது என்று எனக்குத் தெரியவில்லை.
- என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. அதனை வகுப்பறையில் நடைமுறைப்படுத்திப் பார்ப்பதற்குத் தயக்கமாகவுள்ளது.



இவ்வாறான பிரச்சினைகள், தயக்கங்கள் என்பவற்றுக்குத் தீர்வு காண்பதாகவே செயல் நிலை ஆய்வு உள்ளது. ஏதாவது ஒரு பிரச்சினையை மையமாக வைத்து அப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஒரு தலைப்பைத் தெரிவு செய்து நீங்கள் செயல்நிலை ஆய்வில் ஈடுபடுங்கள்.

செயல்நிலை ஆய்வுக்கான தலைப்பை எவ்வாறு தெரிவு செய்வது என்பதில் உங்களுக்குப் பிரச்சினை எழலாம்.

→ உங்களால் முடியாது என நினைக்கும் ஒரு விடயம் தொடர்பாக ஆய்வு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

→ சிறிய வரையறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையை மையமாகக் கொண்டு ஆய்வுத் தலைப்பை முதலில் தெரிவு செய்யுங்கள்.

→ உங்களுக்கும் உங்கள் மாணவர்களுக்கும் மிகவும் முக்கியமானது என நீங்கள் கருதும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

→ ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து செய்ய முடியுமென்றால் இணைந்து செய்ய முயற்சி செய்யுங்கள்.

→ பாடசாலைக் குறிக்கோள்களுடன் அல்லது பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட விடயங்களை மையமாகக் கொண்டு தலைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

நீங்களும் ஒரு ஆசிரியராக மாத்திரமல்லாமல் ஆய்வாளராகத் தொழிற்பட வேண்டுமானால் பிரச்சினையைச் சரியாகத் தெரிவு செய்பவராக இருத்தல் வேண்டும். ஆய்வுப் பிரச்சினையைத் தெரிவு செய்யும் போது அதன் பின்னணி பற்றிக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பிரச்சினை ஆய்வுப் பிரச்சினை தான் என்பதை உறுதிப்படுத்திய பின் அதனைப் பல உப பிரச்சினைகளாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் ஆய்வுக்கான திட்டமிடலையும் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதல் வேண்டும். ஆய்வுத் திட்டமிடலில் முதன்மையானது இலக்கிய மீளாய்வாகும். (Literature Review)

அதாவது இனங்காணப்பட்ட பிரச்சினையுடன் தொடர்புடைய ஆய்வறிக்கைகள் பற்றி விசாரித்தறிதல் வேண்டும். புத்தகங்கள், சஞ்சிகைகள், நூல் நிலையங்களிலுள்ள ஆய்வறிக்கைகள் போன்றவற்றை வாசித்து ஆய்வு தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு தெளிவையும் பெற்றுக் கொள்ள முடியும். இலக்கிய மீளாய்வு உங்கள் ஆய்வுச் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்குப் பெரிதும் உதவும்.


- நீங்கள் ஆய்வு தொடர்பாக எவ்வாறான தரவுகளைத் திரட்டுதல் வேண்டும்.
- எச்சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- யாரிடமிருந்து திரட்டுதல் வேண்டும்.
- எவ்வாறான ஆய்வு முறையைப் பிரயோகிப்பது?
- எவ்வாறான தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பதாக இலக்கிய மீளாய்வு காணப்படும். ஆய்வின் ஆரம்பத்திலேயே ஆய்வைத் திட்டமிடுதல் ஆய்வுச் செயற்பாட்டை இலகுபடுத்தும்.

### தரவு சேகரிப்பு

அடுத்ததாக ஆய்வு முறையியலின் அடிப்படையில் பிரச்சினை தொடர்பான தரவுகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள். இதற்காக,

- தரவு சேகரிக்கத் தேவையான உபகரணங்களைத் தெரிவு செய்யுங்கள்.
- தகவல் சேகரிக்கும் இடங்களையும் முறைகளையும் திட்டமிடுங்கள்.
- தகவல்களை முறையாக ஒழுங்கமைத்துக் குறித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் நடத்தைகளில் மாற்றங்கள் தெரிந்தால் அவற்றை அவதானியுங்கள். இதற்காக அவதானிப்புப் படிவங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாற்றமுறும் நடத்தைகள் தொடர்பாக மாணவர்களிடம் நேர்காணலை மேற்கொண்டு தரவுகளைச் சேகரியுங்கள்.
- நேர்காணலை மேற்கொள்ள முன்னர் அவை தொடர்பான வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள்.



### தகவல் பகுப்பாய்வு

நீங்கள் சேகரித்த தரவுகளை முறையான பகுப்பாய்வுக்குட்படுத்தாவிட்டால் அத்தரவுகள் பயனற்றதாகிவிடும். இதற்காகப் புள்ளிவிபர முறைகளைப் பயன்படுத்த முடியும். கணினியின் உதவியுடன் மிக இலகுவாகவும் மிகத் துல்லியமாகவும் இப்பகுப்பாய்வினை மேற்கொள்ள முடியும்.


### ஆய்வு முடிவுகளை அறிக்கையிடல்

நீங்கள் ஆய்வுச் செயற்பாட்டைப் பூர்த்தி செய்தால் அதாவது தரவுகளைத் திரட்டி அவற்றைப் பகுப்பாய்வு செய்திருந்தால் பகுப்பாய்வின் மூலம் பெற்றுக் கொண்ட முடிவுகளை அறிக்கையிடுதல் வேண்டும். அவ்வறிக்கையில் நீங்கள் தெரிவு செய்த பிரச்சினை, அதன் பின்னணி, ஏன் அப் பிரச்சினையைத் தெரிவு செய்தீர்கள்? அது தொடர்பாக நீங்கள் மேற்கொண்ட நூலாய்வுகள் எவை? என்பன பற்றியெல்லாம் முறைப்படுத்தி எழுதுதல் வேண்டும். அது தவிர தெரிவு செய்த தரவுகளை எவ்வாறு தெரிவு செய்தீர்கள்? அவற்றை எவ்வாறு பகுப்பாய்வு செய்தீர்கள்? அதன் மூலம் எவ்வாறான முடிவுகளைப் பெற்றீர்கள்? என்பன பற்றியெல்லாம் தெளிவாக முறைப்படுத்தி ஆதாரங்களுடன் எழுதுதல் வேண்டும்.

ஆசிரியர்கள் சுய மதிப்பீட்டினூடாக (Self Evaluation), மீள்நோக்குப் பயிற்சியினூடாக (Reflective Practice) இலகுவாக ஆய்வுச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும். தற்காலத்தில் ஆசிரியர்களுக்கு வேலைப் பளு அதிகம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். அவர்களுக்கு ஆய்வுக்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே கிடைக்கும். ஆனால் முடியுமானவரை உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளின் போது இயலுமான அவதானிப்புகளை மேற்கொண்டு ஆய்வுச் செயன்முறைகளில் ஈடுபட வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். அப்போதுதான் நீங்கள் சாதாரண ஆசிரியர்களிலிருந்து வேறுபட்ட ஒருவராகக் கணிக்கப்படுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குவியக் குழுமம் ஒரு பயன்மிக்க கலந்துரையாடல்

செ.மகேஷ்

## குவியக் குழுமம் என்றால் என்ன?

சேவை அடிப்படையிலும் தொழில் ரீதியாகவும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள், செயற்றிட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயற்படுத்திக் குறித்த இலக்கை அடைய உதவும் சக்தி வாய்ந்த ஒரு நடவடிக்கையே குவியக் குழுமக் கலந்துரையாடலாகும்.

எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கும் அதனை முன்னெடுக்கும் பொழுதில் ஏற்படும் தடங்கல்களுக்கும் ஏற்ற பரிகார நடவடிக்கைகளைத் திட்டமிடவும் மேற்கொள்ளவும் குவியக் குழுமக் கலந்துரையாடல்கள் பெரிதும் உதவுகின்றன.

இது ஒரு பண்புசார் ஆய்வுக் கருவியாகும்

ஒரு விடயம் சார்ந்த முன்னேற்ற நடவடிக்கைகளின் ஏற்றத் தாழ்வுகளைத் தீர்மானிக்கவும் மீள் திட்டமிடவும் அவற்றைத் துணைக்கொண்டு செயற்படவும் தூண்டும் ஒரு வழிமுறையாக இது முன்வைக்கப்படுகிறது.

ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலக் கால எல்லைக்குள் நிகழும் கலந்துரையாடல் மூலம் எதிர்பார்த்த இலக்கினை அடைய நெருங்கிச் செல்லும் நிலையானது இதன் விசேட அம்சமாகக் கொள்ளப்படுகிறது.

குழுமத்தின் துலங்கல்களையும் விரிவான கருத்துக்களையும் அவர்களின் மூலமான இக்கலந்துரையாடல்களில் இருந்து சேகரிக்கலாம்.

இக்கலந்துரையாடலை சாத்தியப்படுத்துநர் ஒருவரின் உதவியுடன் செயற்படுத்துதல் சிறப்பானதாகும்.

இக்குவியக் குழுமக் கலந்துரையாடலில் ஒரு சேவையில் அல்லது செயற்றிட்டத்தில் இணைந்து செயலாற்றும் அனைத்துப்பிரிவினரதும் பங்கேற்பு அவசியமாகும்.

ஒரு விடயம் சார்பில் புதிய எண்ணங்களையும் பின்னூட்டல்களையும் பெறுவதற்கான ஒரு கலந்துரையாடலாகவும் • கருத்தரங்காகவும் இதனைக் கொள்ளலாம்.

## குவியக் குழுமத்தின் நோக்கம்

உற்பத்திகள் சேவைகள் செயலொழுங்குகளைப் பகுத்தாய்ந்து சீராக்கி அல்லது இனங்கண்டு தொகுத்து விளங்கிக் கொண்டு அவற்றை மேம்படுத்தும் செயலொழுங்கை மீளச் சீரமைத்தல்.

செயற்படுத்தப்படுகின்ற விடயத்தின் நடைமுறைச் செயலொழுங்கைத் தீர்மானிப்பதற்கு அதன் முன்னைய செயன்முறையை அளவீடு செய்தல் அல்லது மதிப்பீடு செய்தல்.

தீர்மானமெடுத்தல், மீளமைத்தல், அபிப்பிராயம் கூறல், குவியப்படுத்தல் போன்றவற்றை வரிப்படுத்தத் தேவையான உண்மைத் தகவல்களைப் பெறுதல் - வழங்குதல்.

ஒரு பிரச்சினை தொடர்பில் பொதுவான ஒரு முடிவினைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை அறிவைக் கட்டி எழுப்புதல்.

ஒரு செயற்பாட்டின் அல்லது செயற்றிட்டத்தின் விளைவைக் கணிப்பீடு செய்தல் அல்லது மதிப்பீடுதல்.

## குவியக் குழுமத்தின் பயன்பாடு

பங்குபற்றுநர் தமது அனுபவங்கள் உணர்வுகள் அபிப்பிராயங்கள் எண்ணங்களை ஏனையோருடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பங்குபற்றுதலின்போது செவிமடுப்பதன் மூலம் ஆழமான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

தனித்தனி நேர்காணலுக்குப் பதிலாகக் குறுகிய கால வேளையில் பல்வேறு கருத்துக்களையும் ஒப்பிட்டு அளவில் கலந்துரையாடி அதிக தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தனியொருவரின் கருத்துக்கும் மேலாக கூட்டுக் கருத்தாடல் மூலம் சிறப்பான உள்ளீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

## குவியக் குழுமத்தின் செயலொழுங்குகள்

குவியக் குழுமத்தில் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

குவியக் குழுமத்தின் சாத்தியப்படுத்துநராகச் செயலாற்றப் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

குவியக் குழுமக் கலந்துரையாடலை நடத்தப் பொருத்தமான இடம் ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியக் குழுமக் கலந்துரையாடல்களைத் தொடங்கு முன்னர் உங்கள் நோக்கம் தொடர்பான, நீங்கள் முன்வைக்க வேண்டிய பொருத்தமான வினாக்களைக் கொண்ட வழிகாட்டியொன்றைத் தயாரித்து வைத்துக் கொண்டு கலந்துரையாடலைத் தொடங்குங்கள்.

தவிருபவரைப் பாதிக்கும் அல்லது காயிக்கும், அவரது தன்மையை விமர்சிக்கும் வினாக்களைத் தவிர்ப்பதுடன் பொய்யான எதிரான விளைவுகளை அல்லது ஒரு நிறுவனத்திற்கு அல்லது அமைப்பிற்கு அவற்றின் கொள்கைகளுக்கு மாறான கருத்துக்களை வரவழைக்கும் வினாக்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

பங்குபற்றுநர்களின் கருத்துக்களைச் சேகரிப்பதற்குப் பொருத்தமான ஓடியோ, வீடியோ, எழுத்துப் பதிவுகள் போன்றவற்றுள் ஒன்றையோ அல்லது அவற்றுள் பலவற்றையோ ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

குறித்த நேரத்தில் கலந்துரையாடலை ஆரம்பிக்கவும் அதனைப் பொருத்தமான அடைவுகளை நோக்கி நகர்த்தவும் நிறைவு செய்யவும் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

## குவியக் குழுமத்தின் பங்குபற்றுநர்கள்

நிறுவன அமைப்புகளில் பல மட்டங்களில் பணிபுரியும் பல்திறனுடையோர் உள்ளனர். ஒவ்வொரு மட்டத்தினருள்ளிருந்தும் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

ஒவ்வொரு குழுமத்திலும் 8 அல்லது 10 பங்கு பற்றுநர்கள் கலந்து கொள்ளலாம்.

வெவ்வேறு நோக்கங்கள் தொடர்பில் சிறு சிறு குழுக்கள் அமைக்கப்படலாம்.

ஒத்த கருத்துடையோரிடமிருந்து புதிய கருத்துக்கள் வெளிக் கொணர்தல் இயலாதென்பதால் கருத்துப் பரிமாற்றங்களை வலுப்படுத்தும் வகையில் குழுக்கள் அமைக்கப்படுதல் திருப்தியுடையதாகும்.

## குவியக் குழுமத்தின் சாத்தியப்படுத்துநர்


எதிர்நோக்கப்படும் பிரச்சினைக்குப் பக்கச் சார்பற்ற நடுநிலைமையான அனுபவமிக்க பயிற்றப்பட்ட ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்.

அவர் குவியக் குழுமம் பற்றியும் அதன் முறைமை வடிவமைப்பு செயலொழுங்கு என்பவற்றில் பாண்டித்தியமான ஒருவராக இருத்தல் வேண்டும்.

## சாத்தியப்படுத்துநரின் வகிபங்கு

யாவரையும் வரவேற்றுப் பின்னணித் தகவல்களுடன் கலந்துரையாடலை ஆரம்பித்தல்

கூட்டத்தின் அமைப்பையும் சட்டதிட்டங்களையும் விளக்குதலும் விபரித்தலும் வேண்டும்.



முதன்மை வினாவையும் சிறப்பு வினாவையும் மையப்படுத்திக் கலந்துரையாடலை நெறிப்படுத்துதல்.

குழுவினருக்கிடையேயான இடைத்தொடர்பை நெறிப்படுத்துதல்.

பொருத்தமற்ற கலந்துரையாடல் எழாதிருக்கவும், எழும் சந்தர்ப்பங்களில் சரியான வழிக்கு அவற்றை நெறிப்படுத்துதல்.

குழுவினர் சோர்வடையும்போது அவர்களை உற்சாகப்படுத்துதல்.

தனியொருவரின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தி அனைவரும் பங்குபெறச் செய்தல்.

தயங்கியிருப்போரைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துதல்

யாவருக்கும் தொடர் திட்டங்களை விளக்கி நிறைவில் நன்றி தெரிவித்தல்.

## குவியக் குழுமத்தின் நன்மைகள்

நேர்காணலின்போது பெறப்படும் தகவல்களிலும் மேலாக குழுவினரின் இடைத்தாக்கத்தால் உள்ளார்ந்த தகவல்கள் வெளிக்கொணரப் படுகின்றன.

குழு உறுப்பினரிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவுகிறது.

ஆய்வாளர்களால் முன்வைக்கப்படும் வினாக்களுக்கு ஆய்வாளர்கள் எதிர்பார்க்கும் சிந்தனை முடிவுகளுக்கு அப்பாற்பட்ட சிறந்த முடிவுகளைப் பெறும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

குறைந்த செலவில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவரில் அல்லது ஒரு விடயத்தில் அளவுக்கதிகமாகத் தங்கி இருக்கும் போக்கை மாற்றி விடுகிறது.

## குவியக் குழுமத்தின் தீமைகள்

குழுவின் தன்மையைப் பொறுத்து சமநிலை முடிவற்ற தன்மை ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரபட்சம், தனியொருவரைப் புண்படுத்துதல் ஆகியவை வெளிப்படாதிருக்க முயலும்போது இரகசியம் பேணப்படுவதில் சந்தேகங்கள் ஏற்படலாம்.

சாத்தியப்படுத்தினரின் பணி கடினமானதென்பதால் நேர்காணலிலும் மேலான அதி திறனைப் பயன் படுத்த இயலாத சந்தர்ப்பங்களில் சாத்தியப்படுத்துநர் குறை கேட்க நேரிடலாம்.

குழுமத்தின் முடிவுகளைப் பரந்த ஒரு குழுவினரின் தேவைக்குரிய முடிவுகளாகக் கொள்வது இயலாததாகலாம்.


**குவியக் குழுமத்தின் கல்விசார் கலந்துரையாடல்கள்**

கல்விச் செயற்றிட்டங்களிலும் குவியக் குழுமக் கலந்துரையாடல்கள் இன்றைய நிலையில் அவசியமானதாகும்.

அவற்றின் மூலம் கல்வி விருத்தியை ஏற்படுத்துதல் சாத்தியமாகும் என்பதைப் பல நிலைகளிலும் நடைபெறுகின்ற குவியக் குழுமக் கலந்துரையாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

கல்வி விருத்திசார் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல கல்வியியலாளர்களும் விருத்தியை நோக்கிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் செயற்படுத்த முயலும் ஒவ்வொரு செயற்றிட்டத்தையும் அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் குவியக் குழுமக் கலந்துரையாடல்கள் மூலம் சீர் செய்ய முயல்கின்றனர்.

இவ்வகையான உணர்வுபூர்வமான உறுதியான முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு குவியக் குழுமக் கலந்துரையாடல்கள் உறுதுணை செய்யும் எனலாம்.




*("வழிகாட்டலும் ஆலோசனையும்", விமலா கிருஷ்ணபிள்ளை பக்:85)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையின் விளைதிறனை மேம்படுத்தல்

மா.சின்னத்தம்பி

[illegible] மத்திய மகா வித்தியாலய 2008 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா 2009.12.31 அன்று நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

**பாடசாலை முறைமையின் விளைதிறனை மேம்படுத்தல் - சில சிந்தனைகள்.**

மதிப்புமிக்க அதிபர் அவர்களே! அன்புக்குரிய ஆசிரியர்களே! அன்புக்குரிய மாணவச் செல்வங்களே! பொறுப்புணர்வுமிக்க பெற்றோர்களே! நல்லாதரவு தரும் பழைய மாணவர்களே!

அன்புக்குரிய நலன்விரும்பிகளே! தாய்மார்களே! அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

இன்றைய உன்னதமான பாடசாலைப் பரிசளிப்பு தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்தாடல் செய்வதற்கு வாய்ப்பளித்த பாடசாலைச் சமூகத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றியறிதல்களை முதலில் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

இந்த தருணத்தில் எமது பாடசாலை முறையில் விளைதிறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பது பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதும் பயனுள்ளதுமாகும்.

எமது பாடசாலைகளின் விளைதிறனை மேம்படுத்துவது பற்றிய எனது சில சிந்தனைகளை வெளியிடுவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

**வடமாகாணக் கல்வியின் தரநிலைமை**

வடமாகாணம் இலங்கையில் கல்விரீதியில் குறிப்பிடத்தக்களவில் பின்னடைந்துவிட்டது. கடந்த மூன்று தசாப்தகாலத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார ஏகாந்த நிலைகளுடன் தொடர்புடையதாகவுள்ளன. வடமாகாணத்திலிருந்து வவுனியா, கொழும்பு என்றும் இந்தியா, மேற்குலக நாடுகள் என்றும் புலம் பெயர்ந்த மக்கள் பொருளாதார வலிமை கொண்டிருந்தபோது தமது கல்வியைத் தக்க வைத்துக் கொண்டனர்.

கொழும்பு தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் தேசிய மட்டப் பொதுப்பரீட்சை சாதனைகள் பல வருடங்களாக அறுவடை செய்யப்பட்ட போது அந்த மாணவப் பயிர்கள் பெரிதும் வடமாகாணத்தவர்களாக இருந்தமை ஒப்பு நோக்கத்தக்கது. இதேபோல வெளிநாடுகளில் ஒக்ஸ்பிறிட்ஜ் (Oxbridge) மாதிரிப் பல்கலைக்கழகங்களில் கணிசமான யாழ்ப்பாண மாணவர்கள் கற்றுவருவது ஒரு அசாதாரண வளர்ச்சி வாய்ப்புத்தான். ஆனால் அவர்கள் தமது அறிவையும் ஆற்றலையும் சமூக மனப்பாங்கினையும் எமது வடக்கின் அபிவிருத்திக்கு இசைவுடைய வகையில்தான் வளர்த்து வருகின்றனரா? என்பது விடைகாணப்பட வேண்டிய விடயமாகும்.

மூன்று தசாப்த காலம் ஒரு தலைமுறைக்காலம் என்பதால் மேலைத்தேச வாழ்க்கை, மேலைத்தேசக் கல்வி என்பவற்றினால் வடிவமைக்கப்பட்ட புதிய தலைமுறையினர் எதிர்காலத்துக்கு எமது பிரதேச கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான தலைமைகளும் விசையாகவும் விளங்குவர் என்பதில் தெளிவின்மையே நிலவுகின்றது. வடமாகாணத்தின் கல்வி நிலைமைகளை தெளிவுபடுத்துவனவாக பல்வேறு குறிகாட்டிகள் அமைகின்றன. பிரச்சினைமிக்க காலப்பகுதியில் இத்தகைய குறிகாட்டிகளை அட்டவணை தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை - 01**

பாடசாலைக் கல்வி நிலைமைகளை வெளிக்காட்டும் குறிகாட்டிகள் - வடமாகாணம் 2003-2007

| | | 2003 | 2007 |
|---|---|---|---|
| 1. ஆரம்ப பாடசாலை மாணவர்களின் அறிகை அடைவு நிலைப்புள்ளிகள் கணிதம் | மேல்மாகாணம் | 81% | 89% |
| | வடமாகாணம் | 53% | 68% |
| ஆங்கிலமொழி | மேல்மாகாணம் | 53% | 68% |
| | வடமாகாணம் | 29% | 40% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. க.பொ.த(சா/த)சித்தி

| | | |
|---|---|---|
| மேல்மாகாணம் | 53% | 57% |
| வடமாகாணம் | 36% | 45% |

3. தப்பிப்பிழைக்கும் வீதம் - கட்டாய அடிப்படைக்கல்வி (1-9தரம்)

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| மேல்மாகாணம் | 90% | 93% |
| வடமாகாணம் | 74% | 83% |

மேலே தரப்பட்ட தரவுகள் ஒப்பீட்டு ரீதியில் மேல் மாகாணத்தைவிட வடமாகாணத்தின் கல்வித்தரம் குறைவாயிருப்பதைக் காட்டுகின்றது. எனினும் 2003 - 2007 காலப்பகுதியில் மேல்மாகாண நிலைமையில் தென்படும முன்னேற்றங்களும் ஏறக்குறைய நிகரான வளர்ச்சி மாற்றங்களை வடமாகாணம் பெற்றிருப்பது அவதானத்திற்குரியதாகும். அதாவது வளர்ச்சிக்கான இயல்நிலை ஆற்றல் காணப்படுகின்றது என்பதனை உணரமுடிகின்றது. பாடசாலைக் கல்வி தொடர்பான புதிய அவதானங்கள் தற்போது தேவைப்படுகின்றன.

**◆ புதிய அவதானங்கள்**

**✎ பாடசாலைகளில் வேறுபாடுகள்**

எமது பாடசாலைகளிலான கல்வியில் பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. இது உட்கட்டமைப்பு, மாணவர் அனுமதியும் எண்ணிக்கையும், கற்றல் - கற்பித்தல் தர வளர்ச்சி, இணைக் கலைத்திட்ட முன்னேற்றங்கள், பாடசாலை ஆளுகை, மாணவர்க்கான சேவைகள் தொடர்பாகத் தென்படுகின்றன. பெரிய முன்னேற்றங்கள், பாடசாலை ஆளுகை, மாணவர்க்கான சேவைகள் தொடர்பாகத் தென்படுகின்றன. பெரிய முன்னேற்றங்கள், பாடசாலை ஆளுகை, மாணவர்க்கான சேவைகள் தொடர்பாகத் தென்படுகின்றன. பெரிய பாடசாலைகளில் துரிதமான வளர்ச்சியும் பல்முனை விரைவுபடுத்தலும் ஏற்படுகின்றது. ஆனால் சிறிய கிராமியப் பாடசாலைகள் தேய்வடைந்து செல்வதை உணரமுடிகின்றது கிராமியப் பாடசாலைகள் பலவற்றைக் கடந்து நகரின் அல்லது பிரதேசத்தின் பெரிய பாடசாலைகளுக்கு மாணவர் அசைவது அதிகரிக்கின்றது. இதனால் மாணவர் வெளியேறும் பாடசாலைகள், மாணவர் உள்நுழையும் பாடசாலைகள் இரண்டிலும் சமநிலை குலைந்து போகும் செயலாற்றங்கள் அதிகரிக்கின்றன. இதனை பின்வரும் காரணிகள் ஊக்குவிக்கின்றன.

- ✡ பெற்றோர் பொருளாதார வசதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- ✡ கற்பித்தல் முயற்சிகள் பற்றிய நம்பிக்கைகளும் அவநம்பிக்கைகளும்.
- ✡ பாடசாலை மட்ட மேலோங்கியோர் (Elites) தொடர்புகளிலான மாற்றம்.
- ✡ பாடசாலைகளிலான உட்கட்டமைப்பு முறைகளின வளர்ச்சி மற்றும் நவீனத்துவம்சார் வேறுபாடுகள்.
- ✡ சமூக மட்டத்தில் காணப்படும் கல்விசாராத காரணிகள்.
- ✡ தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லுதல் தொடர்பான மாணவர் எண்ணங்களும் சகபாடி நிலையிலான மாணவர் அபிப்பிராயங்களும்.
- ✡ தேசிய பரீட்சைகளிலான சித்திகள் உருவாக்குகின்ற மாற்றங்கள் தேடும் உந்தல்களும் உறங்கல்களும்.

பாடசாலைகளிடையிலான ஏற்றத்தாழ்வுகளை இணைப்பதன் மூலம் கூடியளவு கற்றல் வினைத்திறனை உயர்த்திக் கொள்ள முடியும். இடநகர்வு முனைப்பு அசாதாரண கற்றல் முன்னேற்றங்களை மாணவரிடம் ஏற்படுத்தியிருக்கவில்லை. எல்லாப் பாடசாலைகளும் குறிப்பாக கிராமிய (Type 2) பாடசாலைகளின் முன்னேற்றங்கள் துரிதப்படுவதும் அவைபற்றிய பெற்றோரிடையிலான விழிப்புணர்வை அதிகரிப்பதும் முன்னேற்றங்கள் துரிதப்படுவதும் அவை பற்றிய பெற்றோரிடையிலான விழிப்புணர்வை அதிகரிப்பதும் தேவைப்படுகின்றது.

**◆ பாடசாலை நல் ஆளுகை**

- ✡ பாடசாலைகளின் ஆளுகை தொடர்பாக புதியமாற்றங்கள் - விரும்பத்தக்க மாற்றங்கள் பரவலாக ஏற்பட்டுள்ளன.
- ✡ ஆசிரியர் மட்டத்தில் வலுவூட்டல் அதிகரித்துள்ளது. கல்வி, பயிற்சி, பங்குபற்றல் சார்ந்த நேர்முறை நாட்டமும் செயற்பாடும் அதிகரித்துள்ளது.
- ✡ ஆசிரியர் தரவட்ட செயற்பாடுகளில் படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்பட்டு கற்பித்தலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
- ✡ வகுப்பறைக் கற்பித்தலில் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு நவீனமயமாகியுள்ளது. மாணவர் சுயசெயற்பாடுகள் அதிகரித்து ஆளுகையும் தலைமைத்துவமும் அதிகரித்துள்ளது.
- ✡ அதிபர்களின் தலைமைத்துவம் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சி பெற்றுள்ளது. அலுவலக கட்டமைப்பு, சுமைபேண் செயற்பாடுகள், பௌதீகக் கட்டமைப்பு விரிவாக்கம், அதிபரிடையிலான புதிய புலக்காட்சி விரிவாக்கம், அதிபர்கள் மட்டத்திலான பிரச்சினைகள் பற்றிய கலந்தாய்வு தொடர்பாக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களிடமிருந்து கிடைக்கும் நிதி உட்பாய்ச்சல் பெருகியுள்ளதோடு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களும் பாடசாலைகளில் அதிகரித்துள்ளன.

- பாடசாலை செயற்பாடுகளில் மாணவர் நலன்கள், மாணவருடனான தகவல் தொடர்பாடல்களில் துரித முன்னேற்றங்கள் (குறிப்பாக மின்னியல் தொடர்பாடல்கள்) ஏற்பட்டுள்ளன. நிர்வாக - மாணவ தொடர்புகள் செறிவுடையதாகியுள்ளன.


- ஆசிரியர் பரம்பலும் பணியும் அதிகரித்துள்ளன. பல பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு மற்றும் கற்பித்தல் பணி நியமனம் காரணமாக மேலதிக ஆசிரியர்கள் கிடைக்கின்றனர். இது சாதகமான நிலைமைகளையும் (வேலைப்பகிர்வு குறைவான நிலைமைகளினால்) தோற்றுவித்து விடுகிறது. பாடசாலை நிர்வாகத்தின் அதீத கவனம் ஈர்ப்பை அத்தகைய நிலைமைகள் உருவாகியுள்ளன.

- ஆசிரியர்களிடம் மாற்றுத்திறன்களை வளர்ப்பது, அவற்றைப் பயன்படுத்துவது பற்றிய தேவையும் முனைப்பும் வலியுறுத்தப்படுகின்றது. ஆங்கிலம், கணிதம், தகவல் தொடர்பாடல், அழகியல் பாடங்களைக் கற்பிப்பதில் ஆசிரியர்களின் மாற்றுத்திறன்களும் ஈடுபடும் வேண்டுப்படுகின்றன. பாடசாலைத்தலைமைத்துவம் அதிக அக்கறையுடனிருந்தாலன்றி இதில் விளைவுத்திறனையும் மகிழ்வு உறவிலான இணக்க நிலையையும் பேண முடியாது. பல பாடசாலைகள் இதில் அதிக இடர்பாடுகளை எதிர் கொள்கின்றன.

- அதிபர்களுடன் இணைந்து பணியாற்றும் ஆசிரிய அணிகள் மேலெழுப்படுகின்றன. குறுகியகால நிகழ்ச்சி நிரல்கள் பாடசாலைகளில் அதிகரிக்கின்றன. அதிகளவு தகவல் திரட்டலும், தகவல் அனுப்புதல்களும் பெருகியுள்ளது.

- குறுகியகாலத்தில் பல ஆசிரியர்கள் பல செயலமர்வுகளுக்கு அழைக்கப்படுகின்றனர். தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், பாடத்திட்ட மாற்றங்கள், பரீட்சை மதிப்பீடுகள் தொடர்பாக குறுகியகாலத்தில் அதிகரிக்கின்றன. இவை கவனமாக ஒழுங்குபடுத்தப்படாவிடில் மாணவர் கற்றலில் விளைதிறனை உறுதிப்படுத்த முடியாமற் போய் விடும்.

வேலைகளை சுமப்பதிலான உள்முரண்பாடுகள் புதியனகற்பதில் எதிர்மனப்பாங்கு தொழில் ரீதியான பதவியுயர்கள் பற்றிய அசமப்பிக்கை சம்பள காரணமாக ஒரு தொகுதி ஆசிரியர்கள் பாடசாலை ஆளுகை செயற்பாடுகளில் "தாமரை இலையில் தண்ணீர்" போல் இயங்குகிறார்கள். அதிபரிடமிருந்து விலகி பணியாற்றவிரும்புகிறார்கள். இது உடன்பாடான செயலாற்றமல்ல. மகிழ்ச்சியுடனும் ஊக்கத்துடனும்



இணக்க உணர்வுடனும் பாடசாலை வேலைகளைச் சுமப்பதில் ஆசிரியர்கள் சுயமுனைப்புடையவர்களாதல் வேண்டும். பாடசாலை நிர்வாகம் மற்றும் தலைமைத்துவமும் இவர்களுடன் அடிக்கடி கலந்தாய்வு செய்து உணர்வு மற்றும் மனவெழுச்சி ரீதியில் அவர்களை வென்றெடுத்தல் அவசியமாகின்றது.

- திறன் விருத்திமுனைப்புக்கள்

எமது பாடசாலைகள் அறிவை மேம்படுத்துவதில் அதிகமுனைப்பைக் காட்டுகின்றன. கணிசமானளவு வெற்றியீட்டுகின்றன. அவற்றை மகிழ்வுடன் படுத்துகின்றன. திருப்தியளிக்கின்றது. ஆனால் இது மாத்திரம் போதாது. இன்னும் புதிய திசைகளில் இடைவெளிகள் - வெறுமைகள் - தென்படுகின்றன. அவற்றை நிரப்ப வேண்டும். குடும்ப மட்டத்திலும் - பாடசாலை மட்டத்திலும் - சமூகமட்டத்திலும் மாணவர்திறன்கள் வளர்க்கப்படல் வேண்டும்.

முன்பெல்லாம் பாடசாலை தவிர்ந்த நாட்கள், நேரங்களில் மாணவர்கள் குடும்பத்துடன் இணைந்த உற்பத்தி முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். பல தொழில்நுட்ப திறன்களையும் உடலியக்க திறன்களையும் பெற்றுக் கொண்டனர்.

துளாமிதித்தல், தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுதல், பயிர்களை பேணுதல் போன்ற உற்பத்தி சார் திறன்களும், மனப்பாங்கும் முன்பு வளர்க்கப்பட்டன. பெற்றோர் சிரமங்கள் பற்றிய உள்ளுணர்வும் வளர்ந்தது.

இப்போது வீட்டில் பிள்ளைகள் இருப்பதேயில்லை. ஓய்வு, சுயவாசிப்பு, குடும்ப உற்பத்தி ஈடுபாடு, பெற்றோருடனான கலந்துரையாடல், குடும்பமாக அனைவரும் ஒரே தடவை திருவிழாக்களுக்குச் செல்லுதல் போன்ற பலவற்றை பிள்ளைகள் இழந்து நிற்கின்றார்கள். இதனால் பலதிறன்களை கற்கத்தவறி விட்டனர். டியூசன் பொறிமுறை, ஊடகத் தொடர்பு, கைத்தொலைபேசி அந்நியோன்யம், குறுந்தகட்டுப் பொழுது போக்கு என்பன அவர்களை ஆக்கிரமித்து விட்டன. இதனால் சில அவசியத்திறன்களை இழந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித் திட்டத்தில் ஒன்றிணைக்க வேண்டும். இதற்காக வளங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். பாடசாலை நேரத்தை நீடிக்க வேண்டும் புதிதாக விரிடையும் தனியார்துறைத் தொழில் வாய்ப்புக்களை மாணவர் கைப்பற்ற வேண்டும்: புதிய மாதிரியான தொழில்வாய்ப்பு நோக்கி தம் கவனத்தை திருப்ப வேண்டும்.

வடக்கு மாகாணத்துக்கு வெளியேயும், இலங்கைக்கு வெளியேயும் தொழில்களையும், வாழ்க்கையையும் தேட வேண்டும். புதிய தொழில் முனைவோராக தம்மை மாற்றியமைக்க வேண்டும். கல்வி கற்ற வியாபார, மற்றும் கைத்தொழில் முயற்சியுடையவராக எமது மாணவர்களை மாற்ற வேண்டும். இதற்கு திசைப்படுத்துவதில் பாடசாலைகள் தான் அக்கறை கொள்ள வேண்டும்.

- பலமொழியறிவும் பேசும் திறனும், பேசும் நம்பிக்கையும்
- சிறந்த தகவல் தொழில்நுட்பத்தேர்ச்சி
- பல சிறிய, நுட்ப உபகரணங்களை இயக்கும் திறன்கள்
- புதியன புனையும் ஆற்றல்கள் (ஓவியம், கவிதை, அறிவியல் நாடகங்கள், புதிய மாதிரி இலக்கிய வடிவங்கள் புனையும் திறன்கள்)
- புத்தாக்க உற்பத்திகளை உருவாக்குதல் (புதிய பொருட்களை சுய கண்டுபிடிப்பு மூலம் உருவாக்கல், கடதாசி, செயற்கைக்களி, உலோகம், என்பவற்றிலிருந்து போட்டி முறையில் புதியன உருவாக்கும் திறன்களை வளர்த்தல்)
- பல்வகை ஒழுங்குபடுத்தல் திறன்கள் (பல்வேறு பொருட் குவியல்கள், ஆட்கள், நிகழ்ச்சிகள் என்பவற்றை புதிய மாதிரியில் ஒழுங்குபடுத்தல் திறன்கள் தேவை, இதற்கான புதிய எண்ணங்களும், செயல்களும் ஊக்கவிக்கப்படுதல்)
- அணிகளில் செயலாற்றும் திறன்கள் (வேறுபட்ட பழக்கம், நம்பிக்கை, மொழி, திறன்கள் உடையவர்களுடன் செயலாற்றங்களை உறுதிப்படுத்துவதற்கு ஒன்றிணைத்தல். இதற்கான மென்திறன்களை (Soft Skills) திட்டமிட்டு வளர்த்தல்)
- பிரச்சினை தீர்க்கும் திறன்கள் (மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகள் பற்றி தனியாகவும், குழுவாகவும் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். பிரச்சினைகளின் மூலகங்கள், அவற்றிடையிலான தொடர்பு பற்றியும் ஆழமாக கலந்துரையாட வேண்டும்).
- பிரச்சினை தீர்க்கும் திறன்கள் (மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகள் பற்றி தனியாகவும், குழுவாகவும் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். பிரச்சினைகளின் மூலகங்கள், அவற்றிடையிலான தொடர்பு பற்றியும் ஆழமாக கலந்துரையாட வேண்டும்.)
- மதிப்பீடு செய்யும் திறன்கள். (மாணவர்கள் நாளாந்தம் நாளின் முடிவில் தமது வகுப்பறை மட்ட பல்வேறு செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் திறன்களை வளர்த்தல் வேண்டும். தகுதிவிதிகளை உருவாக்கல், தர நிர்ணயம், தரம் என்பவற்றை உருவாக்கவும், நிலைமைகளைக் கூர்ந்து அவதானிக்கவும், படிமுறையில் செயற்படவும், மதிப்பீட்டை எண்வடிவில் அல்லது குறியீட்டு வடிவில் புலப்படுத்தவும் கூடிய திறன்களை வளர்த்தல் வேண்டும். தனிநபர் மதிப்பீடு, சகபாடி மதிப்பீடு, வகுப்பு நிலை மதிப்பீடு என்பவற்றில் பயிற்சியளித்தல் வேண்டும்)

இத்தகைய திறன்களை வளர்ப்பதற்கு வகுப்பு மட்டத்தில் பயிற்சி, போட்டி, கற்பித்தல் என்பன ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட தரத்தினை செயற்திட்டங்கள் வேண்டும். திறன் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படல் வேண்டும். கோட்ட, வலய, மாவட்ட மட்டதினும் இவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

பாடசாலை தலைமைத்துவம் இதில் தாமதமின்றி முனைப்புடன் செயற்படல் வேண்டும். இதற்கான கட்டமைப்பை உருவாக்குதல் மிக அவசியம்.

### நிபுணத்துவ மாணவ விருத்தி

பாடசாலைகளில் பல்வேறு பாடங்களிலுமான மாணவர் பரீட்சை மற்றும் கணிப்பீட்டு அளவீடுகளில் மிகச்சிறப்பாக தொடர்ச்சியாக செயற்படும் மாணவர்களை இனங்காண வேண்டும். சராசரியாக 90 - 100 புள்ளிகளை புதிய மேலதிக கற்பித்தல் மற்றும் செயற்பாடுகளுக்கும் உட்படுத்தல் வேண்டும். புதிய பாடங்கள், மேலதிக பாடங்கள், புதிய மொழிகள், புதிய திறன்கள் என்பவற்றை அவர்களுக்கு போதிக்க வேண்டும். விசேட வழிகாட்டல்களையும், ஒழுக்க நியமங்களையும் வலியுறுத்தி நிறைவான உதவிகளையும் வழங்க வேண்டும்.

இவர்கள் புதிய இளம் விஞ்ஞானிகளாக, அசாதாரண கொள்கை வடிவமைப்பாளர்களாக வளர்க்கப்படல் வேண்டும். இவர்களுக்கான வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர் உதவியுடன் பெற்றுக் கொடுக்கவும் முயற்சி செய்யவும் முடியும்.

ஆனால் எமது பிரதேச முன்னேற்றத்தின் வழிகாட்டி களாக இவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

### விசேட கல்வியில் புத்துணர்வூட்டல்

எமது பாடசாலைகளில் தென்படும் புதிய தோற்றப்பாடு இடப்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகளாகும். சொல்லொணாத்துயரங்களுடனும், அச்ச உணர்வுடனும், நிச்சயமின்மைகளுடனும், மன அழுத்தங்களுடனும், பொருளாதார பலவீனங்களுடனும் யுத்த பிரதேசங்களிலிருந்து எமது பிரதேசங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு பல ஆயிரம் மாணவர்கள் வந்த வண்ணமுள்ளனர்.

இவர்களுக்கு உடல், உள பாதுகாப்பையும் நம்பிக்கையையும் வழங்குதல் முதலாவது தேவையாகும். இதற்குரிய மனப்பாங்கை ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் வளர்ப்பது பாடசாலை முகாமைத்துவத்தின் பொறுப்பும் கடமையுமாகும். இதற்கு மேலதிக நேரத்தை ஒதுக்குவதும், மேலதிக நேரத்தை ஒதுக்குவதும், மேலதிக வளங்களைத்திரட்டுவதும், கூடுதல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதும் அவசியமாயுள்ளது.

இரண்டாவது படிநிலை அவதானத்துக்குரியது இவர்களுக்கான விசேட கல்வி ஏற்பாடாகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்களில் அக்கறை கொள்ள வேண்டும்.

- இத்தகைய இடம்பெயர்ந்த மாணவர்களை சரியாக இனங்காண வேண்டும். அவர்களது பெற்றோருடன் தொடர்புகொண்டு உரையாட வேண்டும். சிலருக்கு விசேட மருத்துவ தேவைகள் இருக்கலாம். அவற்றை இனங்கண்டு விசேட உதவிகளை வழங்க வேண்டும்.
- இத்தகைய மாணவருக்கென விசேடமான மாணவ முகாம்களை உருவாக்குவதும் உளநெருக்கீடுகளிலிருந்து படிப்படியாக அவர்களை விடுப்பதும் அவசியம். யாழ்பல்கலைக்கழக நாடக, அரங்கியல், இசை, நாட்டியத்துறையினருடனும், மருத்துவத்துறையினருடனும், அரசசார்பற்ற செயற்பாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்று மாணவர்களிடம் மனவெழுச்சிச் சமநிலையை விருத்தி செய்தல் முடியும்.
- இத்தகை மாணவருக்கென விசேடமான மாணவ முகாம்களை உருவாக்குவதும் உளநெருக்கீடுகளிலிருந்து படிப்படியாக அவர்களை விடுவிப்பதும் அவசியம். யாழ் பல்கலைக்கழக நாடக அரங்கியல், இசை, நாட்டியத்துறையினருடனும், மருத்துவத்துறையினருடனும், அரசசார்பற்ற செயற்பாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்று மாணவர்களிடம் மனவெழுச்சிச் சமநிலையை விருத்தி செய்தல் முடியும்.
- இத்தகைய மாணவருக்கான புதிய நுணை - பாடத்திட்டங்களை உருவாக்க முடியும். உள்ளடக்கல் கல்வி ஏற்பாடுகளையும் பின்பற்ற வேண்டும். கல்வியியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக கல்வித்துறையினர் உதவிகளையும் பெறுமுயற்சி செய்தல் வேண்டும்.
- இவர்களுக்கான அசாதாரண தேவைகள் ஏற்பட்டால், அதற்கேற்ற உட்கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். பாடசாலையிலும், வகுப்பறைகளிலும் இத்தகைய விசேட உட்கட்டமைப்பு,



விசேட கற்பித்தல் அலகுகள் என்பவற்றையும் உருவாக்கமுடியும்.

- ஆசிரியர்களுக்கு விசேட கல்வி பற்றிய விசேட செயலமர்வுகளை ஏற்படுத்தி பயிற்சியும், வழிகாட்டலும் வழங்க வேண்டும்.
- ஆசிரியர்களின் மனப்பாங்கை முன்னேற்ற வேண்டும் என்பதோடு விசேட தேர்ச்சிகளையும் அவர்களிடம் வளர்த்தல் வேண்டும்.
- பாடசாலைகளில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்களுக்கும் உள்ளடக்கல் கல்வி தொடர்பான அறிவு, தேர்ச்சி, மனப்பாங்கு, ஈடுபாடு என்பவற்றை போதியளவில் அதிகரித்தல் வேண்டும்.
- சாதாரண மாணவர்களுக்கும் விசேட தேவைகளுடன் இவ்வாறு புதிதாக அனுமதி பெற்றுவரும் மாணவருக்கும் இடையிலான பெற்றுமுறை இடைவினைகளை முன்னேற்றுவதிலும் பாடசாலைகள் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டும்.
- காலப்போக்கில் இவர்களிடமிருந்து மித்திறன் மிக்கவர்களையும், மாற்றுத்திறன்கள் உடையவர்களையும் உருவாக்கமுடியும் என்ற உள்ளுணர்வுடன் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். அப்போது தான் முழுமையான ஒன்றிணைந்த வகையில் பாடசாலை வினைத்திறனை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் தற்போதைய பாடசாலைக்கல்வி ஏற்பாடுகளில் தோல்வியடைவோரைக் குறைப்பது பற்றிச்சிந்திக்க வேண்டியது அவசியமல்லவா?

மாற்றுத்திறன்களையும், மாற்றுவளர்ப்புக்களையும், மாற்றுப் பயிற்சிகளையும் நாம் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

பாடசாலை முறைமையில் சேர்வோரில் 3வீதத்தினர் தான் பல்கலைக்கழகம் நுழைகின்றனர். பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதியுடையவர்களில் 13.9 வீதத்தினர் தான் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகின்றனர்.

எமது பாடசாலை முறைமையின் பரீட்சைச் சாதனையாளர்களையும், எமது அரச பல்கலைக்கழக பட்டதாரிகளையும் உன்னதமான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் அதிகம் மதிப்பதில்லை. தொழில் வழங்குவதில்லை. கலைப்பட்டதாரிகள் தொழில் வாய்ப்புக்காக சமூக ஆதரவை திட்டுவதற்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டியுள்ளது. இதில் பலவீனங்கள் புதைந்துள்ளன.

இவற்றிலிருந்து விடுபடுவோம், இயன்றளவு எல்லா மாணவருக்கும் ஏதோ ஒரு உயர்கல்வி வாய்ப்பை அல்லது உயர் தொழிற்தகைமையை அல்லது கண்ணியமான தொழில்வாய்ப்பை அல்லது தொழில் முனைப்பாளருக்கான இயலுமையை உருவாக்குவோம். பாடசாலை முறைமையின் பல்வகைமையை அதிகரிப்போம். இயன்றளவு அதிக எண்ணிக்கையினர் பயனடையக்கூடியதாக பாடசாலை முறைமையை புதிய செயல்முறைகள் நோக்கி திசைப்படுத்துவோம்.

வங்கிகள், கைத்தொழில் நிறுவனங்கள், மதியுரையாளர்கள், யதார்த்தமான கல்விச்சிந்தனையாளர்கள் போன்றவர்களைப் பாடசாலைகள் உச்சமாகவும், உத்தமமாகவும் பயன்படுத்த வேண்டும்.

முன்மொழியப்பட்ட பலவற்றையும் செயல்முறைப்படுத்தி பாடசாலைகளின் எதிர்கால வெற்றியை உறுதிப்படுத்துவோம்.

---

## அதிபரும் தலைமைத்துவமும்

பாடசாலையில் செயற்படும் ஒரு குழுவான மனிதர்களை தெளிவான குறிக்கோள்களை நோக்கிச் செயற்படுமாறு செய்வதற்கு தலைமை தாங்குதல் அல்லது வழிகாட்டுதல் தலைமைத்துவம் எனப்படுகிறது. அதிபர் தலைமைத்துவ இயல்புகளும் ஆற்றலும் கொண்டவராகவும் செயற்பட வேண்டும்.

இதில் பாடசாலைகளின் பணிபுரியும் அலுவலக ஊழியர் உதவி வழங்கும் பணியாளர், சிற்றூழியர் என்போரைவிட ஆசிரியர் அணிக்கு வழிகாட்டுவதே மிகவும் முக்கியமாகிறது.

ஆசிரியர்கள் சாதாரண மனிதர்கள்; சுயதேவைகளும் இலட்சியங்களும் கொண்டவர்கள்; சில பலவீனங்களும் பிரச்சினைகளும் கூட அவர்களுக்குண்டு. அவர்கள் தம் சுய முன்னேற்றத்திற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் சில சமயங்களில் தாம் சார்ந்த சமூக முன்னேற்றத்திற்கும் உரிய வலுவையும் தேடுதற்காக வேலைக்கு வருகின்றனர் என்ற தெளிவுடன் அதிபர் ஆசிரியர்களை அணுக வேண்டும்.

அவர்களது நடத்தைகள் பல்வேறுபட்டனவாக அமையும். பல சுயநாட்டங்களுடன் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபடுவர்.

அதிபர் சிறந்த தலைவராக தொழிற்படுதற்கு இவை தொடர்பான தெளிந்த அறிவையும் அவர்களைக் கையாள்வதற்கான திறன்களையும் கொண்டிருக்க வேண்டும். சில ஒழுக்கப் பண்புகளும், ஒழுங்குமுறைகளும் கொண்ட நடத்தைகளினால் சிறந்த தலைவர் என்ற நல்லெண்ணத்தை உருவாக்கிக் கொள்வதில் அதிபர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. போதிய கல்வித் தகைமை மிக்க புலமைசார் தலைவராக அதிபர் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

("பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை", மா.சின்னத்தம்பி, பக்: 43-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல்: சில அடிப்படைப் பிரச்சினைகள்

எம்.ஏ.நுஃமான்

## 1. ஆரம்ப வகுப்புகளில் தாய்மொழி கற்பித்தல் என்றால் என்ன?

தாய்மொழி கற்பித்தல் பிறமொழி கற்பித்தலில் இருந்து சில வகையில் வேறுபடுகின்றது. பிறமொழி கற்கும் ஒரு மாணவனுக்கு அம்மொழி முற்றிலும் புதியதொன்றாகும். ஆனால் தாய்மொழி கற்பவனுக்கு அது அவ்வாறல்ல. ஐந்து வயது முடிந்த பிறகுதான் ஒரு குழந்தை பாடசாலைக்குச் செல்கின்றது. அந்த வயதில் தன் சொந்த மொழியில் தனது தேவைகள் அனைத்தையும், தனது எண்ணங்கள் அனைத்தையும் வெளிப்படுத்தக் கூடிய மொழியறிவு அக் குழந்தைக்கு இருக்கும். ஒரு குழந்தை பாடசாலைக்கு வர முன் தன் தாய்மொழியை தான் வாழும் சமூகச் சூழலில் இருந்து - பெற்றோர், சகோதரர், விளையாட்டுத் தோழர், உறவினர், அயலவர் முதலியோரின் தொடர்புகள் மூலம் - நன்கு பேசக் கற்றுக்கொள்கின்றது.

குழந்தை தன் மொழியை நன்கு பேசக் கற்றுக் கொண்டது என்னும் போது தன் மொழியின் அடிப்படை அமைப்புக்களில் நன்கு தேர்ச்சி பெற்றுக் கொண்டது என்பதே பொருளாகும். அதாவது அம்மொழியின் இலக்கணத்தை அது தன்வயப்படுத்திக் கொள்கின்றது. இது தொடர்பான அமெரிக்க மொழியியல் அறிஞரான ஹொக்கற் என்பவரின் கூற்றும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. "நான்கில் இருந்து ஆறுவயது வரையுள்ள ஒரு இயல்பான குழந்தை மொழியியல் அடிப்படையில் ஒரு வளர்ந்தோனேயாவான். ஏதாவது சில முறுடைகளைத் தவிர அம்மொழியின் ஒலியன் அமைப்பை (Phonemic System) அவன் தன்வயப்படுத்துகின்றான்; அடிப்படை இலக்கணத்தை அவன் முயற்சியில்லாமல் கையாளுகின்றான்; அம்மொழியின் அடிப்படைச் சொற்தொகுதியை அவன் தெரிந்திருக்கிறான்; அதைப் பயன்படுத்துகின்றான்."[1] ஹொக்கற்றின் இக் கூற்று முக்கியமானது. பாடசாலைக்குச் செல்லமுன் உள்ள குழந்தையின் மொழிநிலையை இது நன்கு புலப்படுத்துகின்றது. "மிகவும் சிக்கலான வாக்கியக் கோலங்களைப் பொறுத்தவரை ஹொக்கற்றின் கூற்று சிலவேளை மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடும். எனினும், நிச்சயமாக ஆறு வயது நிரம்பிய ஒரு குழந்தைக்கு, பெயர்ச் சொற்களில் பன்மையாக்கத்தில் கிரமமான சொல்திரிபு மாற்று வடிவங்களை (Reguler Inflectional) எவ்வாறு கையாள்வது என்றும் இறந்தகால வினை வடிவங்களை எவ்வாறு அமைப்பது என்றும் தெரியும். மேலும் எழுவாய் - செயற்படுபொருள் - பயனிலை, பெயரடை பெயர் முதலிய அமைப்புடைய சொற்றொடர்க் கோலங்கள் அவனுள் திடப்பட்டு விடுகின்றன" என்கிறார் மாக்வார்ட் என்னும் அறிஞர்.[2] இவ்வாறு குழந்தை கற்றுக் கொள்ளும் மொழி அக்குழந்தை பிறந்து வளரும் சூழலைப் பிரதிபலிக்கும் அதன் பிரதேச அல்லது சமூகக் கிளைமொழியாகவே (Regional or Social Dialect) இருக்கும்.

> குழந்தை தன் மொழியை நன்கு பேசக் கற்றுக் கொண்டது என்னும் போது தன் மொழியின் அடிப்படை அமைப்புக்களில் நன்கு தேர்ச்சி பெற்றுக் கொண்டது என்பதே பொருளாகும்.

ஐந்து வயது முடிந்து முதலாம் வகுப்பில் வந்து சேரும் குழந்தை தன் தாய்மொழியில் முழு ஆற்றல் உடையதாக இருக்கின்றது என்றால் இந்த மொழியியல் உண்மை, ஒரு அடிப்படையான வினாவை எழுப்புகின்றது. ஆரம்ப வகுப்புக்களில் தாய்மொழி கற்பித்தல் என்றால் என்ன? தாய்மொழி கற்பித்தல் என்ற பெயரில் நாம் என்ன கற்பிக்கின்றோம்? வாசிக்கவும் எழுதவும் கற்பிப்பதையே இது குறிக்கின்றது. பெரும்பாலான ஆசிரியர்கள் கருதுவதுபோல ஆரம்ப வகுப்புகளில் வாசிக்கவும், எழுதவும் கற்பிக்கும் போது நாம் மொழியையே நாம் கற்பிக்கின்றோம்.[3] "தாய்மொழியின் ஒலியியலையும் ஒலியன்களையும் (Phonetic and Phonemes) வகுப்புக்கு வெளியிலேயே மாணவன் கற்றுக் கொள்கின்றான். அதுபோல இலக்கணத்தையும் சொற்களையும் வகுப்புக்கு வெளியிலேயே கற்றுக்கொள்கின்றான். அவன் பாடசாலைக்குப் போகும் முன்பே தன்மொழியின் மொத்த அமைப்பின் பெரும்பகுதியைக் கற்றவனாக இருப்பான். பாடசாலையில் அதிக அளவு சொற்களையும், சிறிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு இலக்கணத்தையுமே அவன் கற்கவேண்டி இருக்கும். அதுவும்கூட அவனது பொது அறிவு வளர்ச்சியை விசாலப்படுத்துவதன் மூலமே நடைபெறுகின்றது" என்கின்றனர் ஹாலிடே முதலியோர். "எந்த வகையிலும் பாடசாலையில் முதல் வருடங்களில் தாய்மொழி கற்பிப்பது என்பது வாசிக்கவும் எழுதவும் கற்பிப்பதாகவே இருக்கும். இது சிரமத்துடன் நிறைவேற்றப்பட வேண்டிய மிகப் பெரிய ஒரு குறிக்கோள் ஆகும். வாசிக்கவும் எழுதவும் கற்பிக்கப்படுவது குழந்தையின் தாய் மொழிப் பழக்கத்தை முற்றிலும் புதிய தொரு ஊடகத்துக்கு விஸ்தரிப்பதைக் குறிக்கின்றது. இந்தப் புதிய ஊடகத்தைப் பிடித்துக் கொள்ளும் குழந்தை அந்நியமான மொழியை முற்றிலும் புதிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தவும் கற்றுக் கொள்கின்றது" என அவர்கள் மேலும் கூறுகின்றனர்.[7]

## 2. பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும்


ஆரம்ப வகுப்புகளில் தாய் மொழி கற்பித்தல் என்பது பேச்சு ஊடகத்தில் (Spoken Medium) நன்கு தேர்ச்சி பெற்ற மாணவனின் மொழியாற்றலை எழுத்து ஊடகத்துக்கு (Written Medium) மாற்றுவதேயாகும் என்பதைப் பார்த்தோம். பொதுவாக எல்லா மொழிகளும் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே சில அமைப்பு வேறுபாடுகளைக் (Structural Differences) கொண்டுள்ளன. குறிப்பாகத் தமிழ் மொழியில் இவ் வேறுபாடு மிகவும் அதிகமாகும். எழுத்துத் தமிழ் அல்லது இலக்கியத் தமிழ் (இ.த) சில தனி இயல்புகளைக் கொண்டுள்ளது. பேச்சுத்தமிழ் (பே.த) இலக்கியத் தமிழில் இருந்து வேறுபட்ட சில இயல்புகளைக் கொண்டுள்ளது. இவை இரண்டும் ஒரே மொழியின் இருவேறுபட்ட வகைகளாகும் (Distinct Varieties). இவை இரண்டுக்கும் தனித்தனியே ஒரு திட்டமான சமூகச் செயற்பாடு (Social Function) உள்ளது. அதாவது இலக்கியத் தமிழ் வேறு நோக்கங்களுக்கும் பேச்சுத் தமிழ் வேறு நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பரஸ்பரம் புரிந்துகொள்வதற்குச் சிக்கலான பல்வேறு தமிழ்க் கிளை மொழிகளைப் பேசுவோருக்கு ஒரு பொதுத் தொடர்பு மொழியாகவும் இலக்கியத் தமிழ் யாராலும் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும், அது மதிப்புச் சார்ந்ததாக மக்களால் கருதப்படுகின்றது. இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடு தமிழ் மொழியைப் போலவே கிரேக்கம், அரபு, சுவிஸ், ஜேர்மன், சீனம் போன்ற வேறு சில மொழிகளிலும் காணப்படுகின்றது. இந்நிலைமை இயல்பை 'Diglossia' என சமூக மொழியியல் அறிஞர்கள் அழைக்கின்றனர்.[8] இதனை இரு வழக்குப் பண்பு என நாம் தமிழில் வழங்கலாம். தமிழில் இவ் இருவழக்குப் பண்பின் சமூகச் செயற்பாட்டை நாம் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டலாம். இவ்வட்டவணை C.A. Ferguson என்பாரின் அட்டவணையைப் பின்பற்றியது. அவர், இருவழக்கு மொழிகளுக்குப் பொதுமைப்படுத்திக் காட்டிய இச் சமூகச் செயற்பாடுகள் தமிழுக்கும் பெருமளவு பொருந்தும்.



| சமூகச் செயற்பாடு | இ.த. | பே.த. |
|---|---|---|
| 1. கோயில், தேவாலயம், பள்ளிவாசல் போன்ற வழிபாட்டிடங்களில் | X | |
| 2. பணியாட்கள், பரிசாரகர்கள், கூலிகள் முதலியோருக்குக் கட்டளையிட | | X |
| 3. சொந்தக் கடிதம் அலுவலக கடிதம் ஆகியவற்றுக்கு | X | |
| 4. பாராளுமன்றம், அரசியல், பொது மேடைகளில் | X | |
| 5. பாடசாலை, பல்கலைக்கழக விரிவுரைகள் | X | |
| 6. குடும்பத்தினர், நண்பர், உறவினர் முதலியோருடன் | | X |
| 7. வானொலி, பத்திரிகைச் செய்திகள், அறிக்கைகள் | X | |
| 8. கேலிச் சித்திரக் குறிப்புகள், விகடத் துணுக்குகள் | | X |
| 9. கவிதை, இலக்கிய விமர்சனம், ஏனைய கட்டுரைகள் | X | |
| 10. நாட்டார் இலக்கியம் | | X |
| 11. வானொலி, மேடை நாடகங்கள் | X | X |
| 12. புனை கதைகள் | X | X |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாறு இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும் அவற்றின் சமூகச் செயற்பாட்டில் வேறுபடுவதுபோல அவற்றின் அமைப்பிலும் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடு இலக்கணம், சொற்றொகுதி, ஒலி அமைப்பு போன்ற எல்லா நிலைகளிலும் காணப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்கு சுருக்கமாக நோக்கலாம்.

## 2.1 இலக்கண வேறுபாடு

இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே அதிக அளவு இலக்கண அமைப்பில் வேறுபாடு காணப்படுகின்றது. தமிழ்மொழியின் வாக்கிய அமைப்புக்கள் பற்றி இன்னும் அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத படியினால் வாக்கிய அமைப்பில் உள்ள வேறுபாடுகள் பற்றி திட்டவட்டமாகச் சொல்லுவது சிரமம். எனினும் இலக்கியத் தமிழில் உள்ளதுபோல அன்றி பேச்சுத்தமிழில் செயப்பாட்டு வினைவாக்கியங்களின் வருகை மிகமிகக் குறைவு எனலாம். ஆயினும், பொதுப்படையாக ஒப்பிடும் அளவில் இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே வாக்கிய அமைப்பில் வேறுபாடுகள் குறைவு எனலாம். ஆனால் உருபன் அமைப்பில் வேறுபாடுகள் மிக அதிகமாகும்.[4] சொல்லுருமாற்று வடிவங்களில் (Inflectional Forms) இத்தகைய வேறுபாட்டினை அதிகம் காணலாம். சில உதாரணங்களை மட்டும் இங்கு நோக்கலாம். பேச்சுத் தமிழுக்குரிய உதாரணங்கள் மட்டக்களப்புத் தமிழில் இருந்து தரப்படுகின்றன.

அ) இலக்கியத் தமிழில் உடைமை வேற்றுமைகள் உருபுகள் அது, உடைய என்பனவாகும். பேச்சுத் தமிழில் உடைமை உருபு -ட-, -ர- என்பனவாகும்.

| இ.த. | பே.த. |
|---|---|
| அவனது | அவன்ட |
| அவனுடைய | அவன்ட |
| அவர்களுடைய | அவங்கட |
| அவளுடைய | அவள்ர |
| அவருடைய | அவர்ர |

ஆ) காலம் காட்டும் இடைநிலைகளிலும் இரு வழக்குகளும் வேறுபடுகின்றன. இலக்கியத் தமிழில் நிகழ்கால இடைநிலை கிறு, கின்று என்பன. பேச்சுத் தமிழில் -க்க-, -ற்- என்பன நிகழ்காலம் காட்டுகின்றன.

| இ.த. | பே.த. |
|---|---|
| வருகிறான் | வாறான் |
| வருகின்றான் | வாறான் |
| படிக்கின்றான் | படிக்கான் |
| படிக்கிறான் | படிக்கான் |

(இ) இலக்கியத் தமிழில் உயர்திணைப் படர்க்கைப் பன்மையில் ஆண், பெண் பால் வேறுபாடு காட்டுவதில்லை. ஆனால் பேச்சுத் தமிழில் அவ் வேறுபாடு உண்டு.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| இ.த. | அவன் வந்தான் | அவர்கள் வந்தார்கள் |
| | அவள் வந்தாள் | அவர்கள் வந்தார்கள் |
| பே.த. | அவன் வந்தான் | அவனுகள் வந்தானுகள் |
| | அவள் வந்தாள் | அவளுகள் வந்தாளுகள் |

ஈ) யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் இறந்தகாலத்திலும் (வழமைப் பொருளில்) நிகழ்காலத்திலும் பெயர் வினையுடன் முடியும்போது, பெயரெச்சம் + மாற்றுப் பெயர் என்ற அமைப்பைக் கொண்டு முடிகின்றது. இலக்கியத் தமிழில் இப்பண்பு இல்லை.

| இ.த. | பே.த. |
|---|---|
| நான் வந்தேன் | நான் வந்தநான் |
| நீ வந்தாய் | நீ வந்தநீ |

## 2.2 சொற்றொகுதி வேறுபாடு

பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும் பெருமளவு சொற்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன. எனினும், இவற்றுக்கிடையே வடிவ வேறுபாடுகளும், பொருளிலும் பயன்பாட்டிலும் வேறுபாடுகளும் உள்ளன. உதாரணமாக இவர், அவை என்னும் சொற்களைக் காட்டலாம். பேச்சுத் தமிழில் இவர் என்பது உயர்திணை ஆண்பால் ஒருமை, மரியாதை வழக்கு. இலக்கியத் தமிழில் இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. இவ என்பதே பேச்சுத்தமிழில் இவருக்கு நிகரான பெண்பால் வழக்காகும். இதுபோல அவை என்பது யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் உயர்திணைப் பன்மை வழக்காகும். உ-ம்: அவை வந்தினம். ஆயின் இலக்கியத் தமிழில் அஃறிணைப் பன்மையாகும்.[5]

இலக்கியத் தமிழில் உள்ள ஏராளமான கலைச் சொற்களும் பிற இலக்கிய வழக்குச் சொற்களும் பேச்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத் தமிழில் வழக்கில் இல்லை. அதுபோல இலக்கியத் தமிழில் இல்லாத பிரதேச வழக்குச் சொற்கள் பேச்சுத் தமிழில் ஏராளம் உள்ளன. பேச்சுத் தமிழில் அன்றாட வழக்கில் உள்ள பழமையான கடன் வாங்கிய சொற்கள் இலக்கியத் தமிழில் வழங்கப்படுவதில்லை. மேலும் ஒரே பொருளைக் குறிக்க இலக்கியத் தமிழில் ஒரு சொல்லும் பேச்சுத் தமிழில் வேறு ஒரு சொல்லும் வழங்குவதும் உண்டு. பின்வருபவற்றை உதாரணமாகத் தரலாம்.

| இ.த. | பே.த.(மட்டக்களப்பு) |
|---|---|
| சாப்பிட்டேன் | தின்டேன் |
| மனைவி | பொஞ்சாதி |
| மலம் | பீ |
| சிறுநீர் | மூத்திரம் |

## 2.3 ஒலியனியல் வேறுபாடு


ஒலியனியலிலும் (Phonology) இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும் பெருமளவு வேறுபடுகின்றன. பேச்சுத் தமிழில் வழங்கும் பல ஒலிப்புள்ள வெடிப்பொலிகளுக்கு (Voiced Stops) சமமான எழுத்து வடிவங்கள் இலக்கியத் தமிழில் இல்லை. /b, d, g/ என்பன சில உதாரணங்கள். பேச்சுத் தமிழில் அண்ணமயமாதல் (Palatalization) சர்வசாதாரணமான நிகழ்ச்சியாகும். 'இ' அல்லது 'ஐ' ஆகிய ஒலிகளை அடுத்துவரும் பல்லின வெடிப் பொலிகள் (Dental Stops) பேச்சுத் தமிழில் அண்ணமயமாகின்றன. சில உதாரணங்கள் பின்வருமாறு:

| இ.த. | பே.த. |
|---|---|
| படித்தேன் | படிச்சேன் |
| பிடித்தேன் | பிடிச்சேன் |
| அடித்தேன் | அடிச்சேன் |
| பிய்த்தேன் | பிச்சேன் |

இலக்கியத் தமிழில் சொல்லின் இடையில் வரும் 'ன்ற்' பேச்சுத்தமிழில் 'ண்ட்' என மாறுகின்றது. சில உதாரணங்கள்:

| இ.த. | பே.த. |
|---|---|
| என்று | எண்டு |
| கன்று | கண்டு |
| நின்று | நிண்டு |

இலக்கியத்தமிழில் ள, ழ, ல ஆகியன தனித்தனியே பேணப்படுகின்றன. பேச்சுத்தமிழில் 'ள' வும் 'ழ' வும் இணைந்து 'ள' வாகவே உச்சரிக்கப்படுகின்றன. வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த பிற மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் பேச்சுவழக்கில் இவை மூன்றும் இணைந்து 'ல' வாக மாறியுள்ளன. தமிழகத்தின் பேற்குப் பிரதேசக் கிளைமொழியிலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.[10] பேச்சுத்தமிழில் 'ந' வும்



'ன' வும் ஒன்றிணைந்துவிட்டன. 'ந' கரம் சொல்லின் இடையில் அதை அடுத்து 'த' கரம் வரும்போது மட்டும்தான் 'ந' கரமாக உச்சரிக்கப்படுகின்றது. இலக்கியத் தமிழில் இவற்றின் உச்சரிப்பு பேச்சுத் தமிழை ஒத்திருப்பினும் எழுத்து முறையில் இவை இரண்டும் தனித்தனியே பேணப்படுகின்றன.

## 3. பேச்சுத் தமிழ் வேறுபாடுகள்

இலக்கியத் தமிழ் பேச்சுத் தமிழில் இருந்து வேறுபடுவது போல், பேச்சுத் தமிழும் பிரதேச அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் பல்வகைக் கிளைமொழிகளாகப் பிரிந்துள்ளது. ஆரம்ப வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பிப்போருக்கு பேச்சுத்தமிழுக்கு இடையே உள்ள இந்த வேறுபாடுகள் பற்றிய அறிவு மிகவும் அவசியமாகும். 'கமில் சுவலபில்' இலங்கைப் பேச்சுத் தமிழை நான்கு உபகிளை மொழிகளாகப் (Sub-Dialects) பிரிக்கிறார். வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு, கொழும்பு ஆகிய பிரதேச அடிப்படையில் அவரது பகுப்பு அமைந்துள்ளது.[] கலாநிதி அ. சண்முகதாஸ் இலங்கைத் தமிழ்க்கிளை மொழிகளை ஆறு ஆக வகைப்படுத்துகின்றார்.[] அவையாவன : (1) வடக்கு வகை (2) வடகிழக்கு வகை தென்கிழக்குவகை (3) வடமேற்குவகை (4) தோட்டத் தொழிலாளர் வகை (5) (6) முஸ்லிம் வகை. வடக்கு வகை மொழி பொதுவாக யாழ்ப்பாணக் கிளைமொழி என வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் தமிழை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. ஆயினும் யாழ்ப்பாணம் மதிப்புயர் மையமாகக் (Centre of Privillage) கருதப்படுகின்றது. வடகிழக்கு வகை திருகோணமலை, மூதூர் ஆகிய தேர்தல் தொகுதிகளில் பேசப்படும் தமிழை உள்ளடக்குகின்றது. தென்கிழக்கு வகை மட்டக்களப்புத் தமிழ் என்று பொதுவாக வழங்கப்படுகின்றது. இக்கிளைமொழிப் பிராந்தியம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்குகின்றது. வடமேற்கு வகை சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் பேசப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மலையகத் தோட்டத் தொழிலாளர் பேச்சைக் குறிக்கின்றது. இது பல வகையில் இந்தியத் தமிழை ஒத்துள்ளது. முஸ்லிம் வகை, இலங்கை முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம்களின் பேச்சைக் குறிக்கின்றது. முஸ்லிம் இலங்கை முழுவதும் பரந்து வாழ்வதனால் அவர்கள் பேச்சில் பொதுத்தன்மைகளோடு சில முக்கியமான பிராந்திய வேறுபாடுகளும் காணப்படுகின்றன.[11]

### 4. அடிப்படைப் பிரச்சினைகள்

ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தலில் உள்ள பிரச்சினைகளை நாம் மேற்காட்டிய மொழியியல் உண்மைகளின் அடிப்படையில்தான் அணுக வேண்டும். இலங்கைப் பேச்சுத் தமிழின் உப பிரிவுகளுக்கிடையே உள்ள அமைப்பு வேறுபாடுகளும், இலக்கியத் தமிழுக்கும் இவற்றுக்கும் இடையே உள்ள அமைப்பு வேறுபாடுகளும் ஆரம்ப வகுப்புகளில் தமிழ் கற்பிப்பதிலுள்ள மையப் பிரச்சினைகளாக உள்ளன. குழந்தைகளைப் பொறுத்தவரை இலக்கியத் தமிழ் பெரும்பாலும் ஒரு புது மொழியேயாகும். "பேச்சுமொழி மட்டும் தெரிந்தவர், தாய்மொழியை எழுதப் படிக்க முற்படும் பொழுது இரண்டாம் மொழி பயில எடுத்துக்கொள்ளும் முயற்சியில் பெரும்பகுதி இதற்கும் தரவேண்டியுள்ளது" என டாக்டர் கோ. சீனிவாசசர்மா கூறுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. பேச்சுத் தமிழை குழந்தை தன் சூழலிலிருந்து இயல்பாகத் தானாகவே கற்றுக்கொள்கின்றது. ஆறு வயதுக்குள் இந்த மொழித்தேட்டம் பூரணமாகி விடுகின்றது. ஆனால், இலக்கியத் தமிழைக் குழந்தை இவ்வாறு இயல்பாகக் கற்றுக் கொள்வதில்லை. திட்டமிட்ட பாடசாலைக் கல்விமுறையின் மூலமே அதைக் கற்றுக் கொள்கின்றது. கல்விமுறைக்கு உட்படாத குழந்தை ஒருபோதும் இலக்கிய மொழியைக் கற்றுக் கொள்ள முடியாது. பேச்சுத் தமிழையும் இலக்கியத் தமிழையும் கற்கும் முறையில் உள்ள இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது.

பேச்சுத் தமிழின் இலக்கண அமைப்பு, இலக்கணக் கருத்துக்கள் பற்றிய வெளிப்படையான எத்தகைய போதனைகளோ விவாதங்களோ இன்றி தன்னிச்சையாகக் கற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் இலக்கியத் தமிழின் இலக்கண அமைப்பு பின்பற்றப்படவேண்டிய பொதுமைகளினதும், விதிகளினதும் அடிப்படையில் கற்பிக்கப்படுகின்றது. இருவழக்குப் பண்புள்ள மொழிகள் எல்லாவற்றுக்கும் இது ஒரு பொதுப் பண்பாகும்.[12] இப்பொதுமைகளும் விதிகளும் நெட்டுருப் பண்ணுவதற்குரிய சூத்திரப் பாங்கானவையாக இருக்க வேண்டும் என்பதல்ல இதன் பொருள். அவை அமைப்புக் கோலங்களின் அடிப்படையில் இருக்க முடியும். ஆகவே தான் இலக்கியத் தமிழில் மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்வதற்கு நவீன கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு திட்டமிட்ட கற்பித்தல் முறை அவசியமாகின்றது.



ஆரம்ப வகுப்புகளில் இலக்கியத் தமிழைக் கற்பிக்கும் போது எழும் முக்கிய கேள்வி, பிற கிளைமொழிகளைப் பேசும் குழந்தைகள் அவர்களின் பேச்சில் இருந்து வேறுபடுகின்ற இலக்கியத்தமிழ் வடிவங்களை எந்த அளவுக்கு விளங்கிக் கொள்கின்றார்கள் என்பதும், எந்த அளவுக்கு அவற்றை அவர்களால் கையாள முடிகின்றது என்பதுமாகும்.[13] குழந்தைகள் தங்களால் தோற்றுவிக்க முடியாத இலக்கியத் தமிழ் வடிவங்களை விளங்கிக் கொள்கின்றார்கள். உதாரணமாக "என்னால் இன்றைக்குப் பாடசாலைக்குப் வர முடியாது" என்னும் வாக்கியத்தை கணிசமான முயற்சியும் தூண்டுதலும் இல்லாமல் கீழ்வகுப்பு மாணவர்கள் அதே வடிவத்தில் தாங்களாகவே தோற்றுவிக்க முடியாதுள்ளனர். ஆனால் அவ்வாக்கியத்தை நாம் சொன்னால் அதன் பொருளை அவர்கள் கிரகித்துக் கொள்கின்றனர். "எனக்கு இண்டைக்குப் பாடசாலைக்கு வர ஏலா" என்று அவர்கள் அவ்வாக்கியத்தைத் தங்கள் மொழியில் பெயர்த்துச் சொல்கின்றனர். இது அவர்கள் அவ்வாக்கியத்தை விளங்கிக் கொள்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

உருபனியல், வாக்கிய இயல் அமைப்புகளில் இத்தகைய பல உதாரணங்களைக் காணலாம். இதன் மறுதலையில் சில இலக்கியத் தமிழ் வாக்கிய ஆக்கங்களையும், வினை வடிவங்களையும், உருபன்களையும் மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளனர். உதாரணமாக சில எதிர்மறை உருபன்களைக் காட்டலாம். படியோம், வரோம், வரேன், தரேன், வந்திலேன் ஆகிய வடிவங்களின் பொருளை கீழ் வகுப்பு மாணவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. கொழும்புப் பாடசாலை ஒன்றில் 5ம் வகுப்பில் கற்கும் 20 மாணவர்களில் ஒருவர் தானும் இவற்றின் எதிர்மறைப் பொருளை விளங்கிக் கொள்ளவில்லை. இவை அவர்களின் பேச்சுத்தமிழில் இருந்து முற்றிலும் வேறுபட்ட வடிவங்களாக இருப்பதே இதன் காரணமாகும். யாழ்ப்பாண மாணவர்கள் இவற்றில் சில வடிவங்களை விளங்கிக் கொள்ளக் கூடும். யாழ்ப்பாணக் கிளைமொழியில் இவற்றுட் சில வழக்கில் உள்ளன. இங்கு சொற்தொகுதியைப் பற்றி நான் குறிப்பிடத் தேவையில்லை, சொற்தொகுதியைக் கற்றலும் கற்பித்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலும் அத்தனை சிக்கல் உடைய தல்ல. அது அனுபவ வளர்ச்சியுடனும் சந்தர்ப்பச் சூழ்நிலையுடனும் தொடர்புடையது.

ஆரம்ப வகுப்புகளில் இலக்கியத் தமிழைக் கற்பிப்பதன் அடிப்படை நோக்கம் இலக்கியத் தமிழை மாணவர்கள் விளங்கிக் கொள்ளச் செய்வதல்ல. பதிலாக தங்கள் எண்ணங்களை இலக்கியத் தமிழ் அமைப்பில் தாமாகவே தெளிவாகவும், தாக்கமாகவும் வெளிப்படுத்தப் பயிற்றுவதாகும். இத்தகைய பயிற்சி சில அடிப்படை முன்தேவைகளைக் கோருகின்றது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. பேச்சுத் தமிழுக்கும் இலக்கியத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பொதுப்படையாக மட்டுமன்றி மாணவனின் வகுப்பு மட்டம் அல்லது வயது மட்டத்தில் இருந்து ஆராய்ந்து பெற்ற தரவுகள் அவசியம். உதாரணமாக ஆறு வயதில் முதலாம் வகுப்பில் சேரும் மாணவனைப் பொறுத்தமட்டில் இது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்.
   அ) முதலாம் வகுப்பில் சேரும் போது குழந்தை எத்தகைய வாக்கியங்களைப் பேசுகின்றது?
   ஆ) அது கையாளும் சொல்லுருமாற்று வடிவங்களும இலக்கண வகைகளும் எவை (Grammatical Category) எவை?
   இ) அதன் சொற்தொகுதியின் பரப்பு என்ன?
   ஈ) அக்குழந்தை இலக்கியத் தமிழின் எத்தகைய அமைப்புக் கூறுகளை (Structural Features) விளங்கிக் கொள்ளும், எவற்றை விளங்கிக் கொள்ளாது?
   உ) அக்குழந்தையின் பேச்சுத்தமிழ் அமைப்பை ஒத்த இலக்கியத் தமிழ் அமைப்புக்கள் எவை?
   ஊ) இவற்றுள் பெருவழக்கானவை எவை? அருகிய வழக்கானவை எவை? அதாவது எவை அதிகம் கையாளப்படுகின்றன, எவை குறைவாகக் கையாளப்படுகின்றன?
2. இத்தகைய ஆய்வின் மூலம் பெற்ற தரவுகளை ஒழுங்குபடுத்த வேண்டும். மொழி ஒழுங்கமைப்புடைய ஒரு வடிவமாகும். ஆகவே அது ஒரு ஒழுங்கு முறையிலேயே கற்பிக்கப்பட வேண்டும். அதனால் தமிழ்மொழியின் இருவழக்குப் பற்றிய பொதுப்படையான ஒப்பீட்டு தெரிவும் (Selection) தரப்படுத்தலும் (Gradation) அவசியமாகும். இது மொழிப் பாட நூல்களும் மொழி ஆசிர்களும் கருத்தில் கொள்ளவேண்டிய அடிப்படை அம்சங்களாகும். நவீன மொழியியலிலும் அதன் ஆய்வு முறைகளிலும் பயிற்சி இல்லாமல் மேற்காட்டிய குறிக்கோளை நிறைவு செய்வது சாத்தியம் அல்ல. மொழியியல் அறிவு இல்லாமலே இதற்குமுன் மாணவர்களுக்கு இலக்கியத் தமிழைக் கற்பிக்கவில்லையா என்று பலர் வாதிடக்கூடும். அது உண்மையே. ஆனால் எத்தனை வீதத்தினர் அதன் மூலம் மொழித்தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதும் நாம் நன்கு அறிந்ததே. எண்ணெய் விளக்கில் நாம் நீண்டகாலம் நம் கருமங்களை ஆற்றி வந்தோம். ஆனால் மின்சாரத்தின் வரவின் பின்னர்தான் அதன் போதாமை 'பளிச்' சென்று தெரிந்தது. இன்று மின்சாரம் அபிவிருத்தியின் இன்றியமையாச் சாதனம் ஆயிற்று. மொழியியல் அறிவும் மொழி கற்பித்தல் துறையில் புதிதாக வந்து புகுந்த மின்சாரமேயாகும்.

- இக்கட்டுரை 1983இல் சிந்தனை இதழில் வெளியானது. பின்னர் இக்கட்டுரை "ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல் ஒரு மொழியியல் அணுகுமுறை" என்னும் நூலில் இடம பெற்றது. இந்நூல் 2002 இல் கொழும்புக் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிவந்தது.
- எம்.ஏ.நுஃமான் மொழியியல் துறையில் கற்கையும் ஆய்வுப் பயிற்சியும் கொண்டவர். எமது புலமை மரபில் மொழியியல் பேராசிரியர் இதற்குமப்பால் விமரிசகர், ஆய்வாளர், கவிஞர், மொழி பெயர்ப்பாளர் இவ்வாறு பன்முக ஆளுமையுடன் விளங்குபவர் பேராசிரியர் அவர்கள்.
- இலக்கணம் கற்பித்தலை மொழியியல் அணுகு முறைகள் வழிநின்று தெளிவாக எடுத்துரைக்கும் பாங்கு கொண்டவர். மேற்குறித்த இக்கட்டுரை இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகள்

சோ.சந்திரசேகரன்

சர்வதேசப் பாடசாலைகள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜப்பான், சுவிட்சர்லாந்து, துருக்கி ஆகிய நாடுகளில் முதலில் தோன்றின. ஒரு நாட்டில் வாழும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளுக்கு வெளிநாட்டுப் பாட ஏற்பாட்டைக் கற்பிக்க சர்வதேசப் பாடசாலைகள் எழுந்தன. ஒரு நாட்டில் வாழும் பல வெளிநாட்டுப் பிள்ளைகள் அங்கு கல்வி கற்றமையால் அவை சர்வதேசப் பாடசாலைகள் எனப்பட்டன. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்று ஆங்கிலம் பேசும் நாடுகளின் பாட ஏற்பாட்டை அவை பயன்படுத்தின. இவ்வாறு சர்வதேசப் பாட ஏற்பாட்டைப் பயன்படுத்திய வெளிநாட்டுப் பிள்ளைகளுக்கான பாடசாலையின சர்வதேசப் பாடசாலைகள் எனப்பட்டன. இவ்வாறான பாடசாலைகளுக்கென தயாரிக்கப்பட்ட சர்வதேசப் பாட ஏற்பாடுகளும் உண்டு. 2007 ஏப்ரல் மாதத்தில் உலகில் இத்தகைய 4179 ஆங்கில மொழிவழி சர்வதேசப் பாடசாலைகள் இருந்தன.

மேலே குறிப்பிட்ட பாணியிலான முதலாவது சர்வதேசப் பாடசாலை இலங்கையில் 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பெயர் Overseas Children's School. இலங்கையில் வாழ்ந்த வெளிநாட்டு இராஜதந்திர சேவையைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வழங்க இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. ஆங்கிலமொழி வழியில் வெளிநாட்டுப் பரீட்சைகளுக்கு இப்பிள்ளைகள் ஆயத்தம் செய்யப்பட்டனர். 1980இன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை வழங்கிய வாய்ப்புகளின் காரணமாக முதலீட்டு ஆலோசனைச் சபை என்பவற்றின் அனுமதியுடன் சர்வதேசப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை 1982இன் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கம்பெனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டன. இலங்கையில் ஏற்கெனவே ஒரு சில தனியார் பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளாகவே இயங்கத் தொடங்கின.

சர்வதேச பாடசாலைகள் இத் தனியார் பாடசாலைகளிலிருந்து வேறுபட்ட பாடசாலைகள். மரபு வழியான தனியார் பாடசாலைகள் நீண்ட கால வரலாற்றைக் கொண்டவை. அரசாங்கப் பாடசாலைகளின் பாட ஏற்பாட்டைப் பின்பற்றி வருபவை. அவற்றில் அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளும்

அட்டவணை I

மாகாண ரீதியாகச் சர்வதேசப் பாடசாலைகள் (2004)

| மாகாணம் | சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. மேல் மாகாணம் | 51 |
| 2. வடமேல் மாகாணம் | 08 |
| 3. சப்ரகமுவ மாகாணம் | 03 |
| 4. தென் மாகாணம் | 02 |
| 5. ஊவா மாகாணம் | 03 |
| 6. மத்திய மாகாணம் | 16 |
| 7. வடகிழக்கு மாகாணம் | 01 |
| மொத்தம் | 87 |

* இத்தகவல்கள் பேராசிரியர் டபிள்யூ.ஜி.குலரத்ன கல்வி அமைச்சிலிருந்து திரட்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இம்மூன்று விடயங்களிலும் சர்வதேசப் பாடசாலைகள் வேறுபட்டவை.

இன்று இவ்வாறான சர்வதேசப் பாடசாலைகள் தலைநகரில் மட்டுமல்லாது நாடெங்கும் பரவலாக எழுந்துள்ளன. 2004 ஆம் ஆண்டுக்கான தரவுகளின் படி மேல்மாகாணத்தில் 54 பாடசாலைகள், வடமேல் மாகாணத்தில் 8 பாடசாலைகள், மத்திய மாகாணத்தில் 16 பாடசாலைகள் என்ற முறையில் சகல மாகாணங்களிலும் 87 பாடசாலைகள் காணப்பட்டன. இன்று இப்பாடசாலைகளின் தொகை மேலும் அதிகரித்திருக்கும்.

1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்ககல்விச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 25 ஆம் பிரிவின் படி கல்வி அமைச்சின் அனுமதியின்றி 5-14 வயதுப் பிள்ளைகளுக்கான பாடசாலைகளை எவரும் நிறுவ முடியாது. இச்சட்டப்படியே அக்காலத்தில் உதவி பெறும் தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு அரசாங்கப் பாடசாலை முறை யொன்று உருவாக்கப்பட்டது. (சில பாடசாலைகள் மட்டுமே தனியார் பாடசாலைகளாக இயங்க அனுமதிக்கப்பட்டன) இன்று இலங்கையில் நிறுவப்பட்டுள்ள சகல சர்வதேசப் பாடசாலைகளும் இச்சட்ட ஏற்பாட்டை மீறி 5-14 வயதுப் பிள்ளைகளை அனுமதிக்கின்றன.


தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையொன்றில் (2003) இது பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது:

இப்பாடசாலைகள் 1961 ஆம் ஆண்டின் உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கலாசாலைகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

**கேள்விக்கேற்ப (Demand) தனியார் அல்லது சர்வதேசப் பாடசாலைகளை அமைப்பதற்கு தனி நபர்களுக்கோ அல்லது கூட்டு அமைப்புகளுக்கோ அனுமதி வழங்கப்படல் வேண்டும். இப்பாடசாலைகள் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். இப்பாடசாலைகளை நடத்துமவரும் அமைச்சுடன் சகல நிபந்தனைகளையும் உள்ளடக்கிய ஒப்பந்தமொன்றைச் செய்தல் வேண்டும்.**

**கல்வி அமைச்சில் இப்பாடசாலைகளின் விவகாரங்களைக் கொண்டு நடத்துவதற்கான விசேட பிரிவொன்று இருத்தல் வேண்டும். இப்பாடசாலைகளின் வசதிகள் பற்றிய நியமங்கள், மாணவர் அனுமதிக்கான தகுதி விதிகள் என்பன கல்வி அமைச்சினால் உருவாக்கப்படல் வேண்டும். இப்பாடசாலைகளுக்கான கண்காணிப்பு முறைமை ஒன்றும் ஏற்படுத்தப்படல் வேண்டும்.**

- தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை, 2003



இவ்வாணைக் குழுவானது இச்சர்வதேசப் பாடசாலைகளில் இலங்கை மாணவர்கள் பயில்வதன் காரணமாக அவற்றுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு ஒரு சட்டவரையறையொன்று உருவாக்கப்படல் வேண்டும் என்று பரிந்துரை செய்தது. இன்றுவரை இப் பாடசாலைகளுக்கான சட்டவரையறை எதுவும் உருவாக்கப்படவில்லை.

பெரும்பாலான சர்வதேசப் பாடசாலைகள் ஆங்கில மொழி வழியில் கல்வி கற்பிக்கின்றன. எனினும் சில பாடசாலைகள் பிரெஞ்சு மற்றும் ரஷ்ய மொழிகளிலும் கற்பிக்கின்றன. பிரித்தானிய அல்லது ஐக்கிய அமெரிக்க பாடஏற்பாட்டை அவை பயன்படுத்துகின்றன.

இது பற்றிய ஒரு முக்கிய விமர்சனம் உண்டு. உதாரணமாக பிரித்தானியப் பாட ஏற்பாட்டின் நோக்கம் சிறந்த பிரித்தானியக் குடிமகனை உருவாக்குவது. இலங்கைப் பாடசாலைகள் சிறந்த இலங்கைக் குடிமகனை உருவாக்க வேண்டும். சர்வதேசப் பாடசாலைகள் உருவாக்கும் பிரித்தானியக் குடிமகன் எவ்வாறு இலங்கைச் சமூகத்தில் பொருந்தி வாழ முடியும்? என்ற கேள்வி மிகவும் பிரதானமானது.

மேலும் சர்வதேசப் பாடசாலைகளில் பயிலும் சகல பிள்ளைகளும் பிரித்தானியாவில் சென்று வாழப்போவதில்லை. ஒரு சிலர் பிரித்தானியா சென்றாலும் அவர்கள் பிரித்தானியா சமூகத்தில் ஆங்கிலேயர்களாக ஏற்றுக் கொள்ளப்படவும் மாட்டார்கள். இந்நிலையில் சர்வதேசப் பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகள் எதுவித அடையாளமும் அற்றவர்களாகப் பிரச்சினைக்குள்ளாகும் சாத்தியக் கூறுகளும் உண்டு. சர்வதேசப் பாடசாலைகள் உள்ளூர் பிள்ளைகளை உள்ளூர் சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தும் பணியிலேயே ஈடுபட்டுள்ளன என்ற கடுமையான விமர்சனமும் உண்டு.

மேலும் சுதந்திரத்திற்குப் பின்னால் நாட்டிற்கான ஒரு தேசியக் கல்வி முறையை ஏற்படுத்தும் முயற்சிகளின் ஒரு அம்சமாக பாடசாலைகளில் தாய்மொழியே கல்விமொழி என்ற கொள்கை நடை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை II
சர்வதேசப் பாடசாலைகள
அறவிடும் கட்டணங்கள் (1993-94)

| கல்விநிலை | பாடசாலைI கொழும்பு | பாடசாலை II கொழும்பு | பாடசாலை III கொழும்பு | பாடசாலை IV கண்டி |
|---|---|---|---|---|
| முன்பள்ளி | 120,000 | 54,500 | 12,500 | 97,000 |
| ஆரம்பக்கல்வி | 150,000 | 64,000 | 17,000 | 13,000 |
| தரம் 10 | | 170,000 | 75,000 | 30,000 |
| தரம் 12 | | 107,000 | 54,000 | 35,000 |

முறைப்படுத்தப்பட்டது. படிப்படியாகப் பல்கலைக்கழகங்களில் பட்டக்கல்வி, மேற்பட்ட கல்வி நிலையிலும் தாய்மொழியில் பயிலும் உரிமை வழங்கப்பட்டது.

தாய்மொழிக் கல்விகாரணமாக சிறந்த கல்வியும் உயர்கல்வியும் உயர்மத்திய வகுப்பினருக்கு மட்டுமே என்ற நிலை நீங்கி அவை சாதாரண மக்கள் மத்தியில் வகுப்பினருக்கு மட்டுமே என்ற நிலை நீங்கி அவை சாதாரண மக்கள் மத்தியிலும் கிராமப்புறங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது. தாய்மொழிக்கல்வியின் காரணமாக மாணவர்களின் ஆங்கில அறிவில் பாதிப்பு ஏற்பட்டாலும் கல்வித் துறையில் சமூக நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட தாய்மொழிக் கல்வி உதவியது. ஆனால் 1990களில் ஏற்பட்ட கோளமயமாக்கம் இலங்கையில் அறிமுகமான தாராளமயப் பொருளாதாரம், அதன் விளைவாக ஏற்பட்ட தனியார் துறையின் எழுச்சி, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் காரணமாக ஆங்கிலமொழி பெற்ற புதிய முக்கியத்துவம், சிறந்த அரசாங்கப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் எழுந்த சிக்கல்கள், அரசாங்கக் கல்வி முறையில் ஏற்பட்ட தராதர வீழ்ச்சி இவை காரணமாக ஆங்கில வழியில் கல்வி வழங்கும் சர்வதேசப் பாடசாலைகளுக்குப் புதிய கேள்வியை ஏற்படுத்தின.

புதிய தாராளமயக் கொள்கை காரணமாகப் பயனடைந்த எழுச்சியுற்ற புதிய செல்வந்த வகுப்பினர்களும் தாய்மொழிக் கல்வியை விடுத்து ஆங்கிலக் கல்வியை நாடமுற்பட்டமையாலும் சர்வதேசப் பாடசாலைகள் விரிவடையத் தொடங்கின.

புதிய பொருளாதாரக் கொள்கைகள் தனியார் மூலதனத்துக்கும் வெளிநாட்டு மூலதன வருகைக்கும் உற்சாகம் வழங்கியமையால் ஏனைய துறைகளில் கைத்தொழில், சுகாதாரம், வர்த்தகம்) ஈடுபடத் தொடங்கிய தனியார் துறையினர் கல்வித்துறையிலும் முதலீடு செய்யத் தொடங்க சர்வதேசப் பாடசாலைகளும் எழுச்சியுறத்தொடங்கின.

நீண்டகாலமாகத் தாய்மொழியில் கற்பித்து வந்த அரசாங்கப் பாடசாலைகள் தமது வசதிகளைக் கருத்திற்கொண்டு ஆங்கில மொழி வழியில் கற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சர்வதேசப் பாடசாலைகளை ஆங்கில மொழி வழியில் கற்பிப்பதால் செல்வந்த வகுப்பினர் ஆங்கிலக் கல்வியைப் பெறமுடிகின்றது. அங்கு பயிலும் மாணவர்களுக்கே சிறந்த தனியார் துறை வேலைவாய்ப்புகளும் கிட்டுகின்றன. எனவே அரசாங்கப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் ஆங்கிலக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பது அரசாங்கக் கொள்கை வகுப்போரின் கருத்தாக இருந்தது. இவ்வகையில் அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கிலவழிக் கல்வி வழங்கும் யோசனைக்கு சர்வதேசப் பாடசாலைகள் முன்மாதிரியாக அமைந்தன என்று கூறலாம்.

கல்வியின் ஒரு பிரதான தொழிற்பாடு வழி வழி வந்த பண்பாட்டு விழுமியங்களைப் புதிய தலைமுறையினருக்கு வழங்கி சமூகத்தின் தொடர்ச்சியான இருப்பினை உறுதி செய்யலாகும். இவ்வாறு பண்பாட்டைத் தொடர்ச்சியாகக் கல்வியினூடாகக் கையளித்து வந்ததன் காரணத்தினாலேயே இன்றைய சமூகம் உறுதிப்பாட்டுடன் விளங்குவதாக கல்விச் சிந்தனையாளர்கள் கொள்வர். எனவே கல்விச் செயற்பாடு ஒரு வகைப் பண்பாட்டுச் செயற்பாடென்றே கொள்ளப்படும். இளந்தலைமுறையினர் தமது பண்பாட்டையும் சமூக விழுமியங்களையும் வரலாற்றையும் கல்வியினூடாக உணர்ந்தவர்களாய் தமது சமூக மேம்பாட்டுக்குப் பணியாற்றும் நற்பிரஜைகளாக மிளிருவர் என்ற எதிர்பார்ப்பு உண்டு. ஆனால் சர்வதேசம் இவ்வுயர்ந்த கல்வியின் நோக்கினை நிறைவேற்றுவனவாக இல்லை. அவை ஆங்கில மொழி வழியில் பிரித்தானியப் பாட ஏற்பாட்டைக் கற்பிப்பவை. பிரித்தானிய சமூகத்துடன் இணைந்து கொள்ளும் கல்வியை வழங்குபவை. ஆனால், சகல சர்வதேசப் பாடசாலை மாணவர்களும் பிரித்தானியா செல்லப் போவதில்லை. சென்றாலும் பிரித்தானிய சமூகத்தில் அந்நியர்களாவே வாழ வேண்டும். அதேவேளையில் சாதாரண இலங்கை சமூகத்தில் ஒன்றிணைந்து கொள்ளவும் முடியாது. அவர்கள் சிரமப்படுவர் என்ற கடுமையான விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பண்பாடு தொடர்பான பிரச்சினை ஏனைய நாடுகளிலும் உண்டு. ஹொங்கொங்கின் உள்ள சர்வதேசப் பாடசாலைகள் பற்றி ஆராய்ந்த ஹொங் கொங் கல்வியாளர்கள் கூறுவதாவது:


'சர்வதேசப் பாடசாலைகளின் பிரதான பணி சீன மற்றும் மேற்கத்தேய கலாசாரங்களை உள்ளடக்கிய கல்விச் சூழலை உருவாக்குவதாகும். 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர்தரமான தேவைகளைக் கருத்திற் கொண்டு நோக்குமிடத்து, சீன நாகரிகத்தையும் மேற்கத்தைய பண்பாட்டையும் உள்ளடக்கிய ஒரு புது வகையான சர்வதேசப் பாடசாலைகள் தேவைப்படுகின்றன. ஒரே வகையான பண்பாடோ, மேலைநாட்டுப் பண்பாடோ தனித்து சர்வதேசப் பாடசாலைகளில் இருக்கக்கூடாது'.

மேலை நாட்டுப் பாட ஏற்பாட்டைப் பயன்படுத்தும் அதே வேளையில்; சிங்கள, தமிழ் மொழிகளுக்கும் தேசிய வரலாறு மற்றும் இலங்கைச் சமூகம் சார்ந்த விழுமியங்களுக்கும் இடமளிப்பது ஒரு கடினமான பணியல்ல. இப்பின்புலத்தில் இலங்கையில் உள்ள சர்வதேசப் பாடசாலைகளும் சில நெகிழ்ச்சியான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிகின்றது. புதிய தரவுகளின் படி சிங்கள, தமிழ்மொழிகள் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

1993/94 இற்குரிய சர்வதேசப் பாடசாலைகளுக்கான கட்டணங்கள் மூன்று கொழும்புப் பாடசாலைகள், ஒரு கண்டிப் பாடசாலைகள் என்பவற்றால் வழங்கப்பட்டவை. இவை போன்ற தரவுகளைப் பெற்றுக் கொள்ள விசேட ஆய்வு முயற்சிகள் தேவை. இக்கட்டணங்கள் இப்பாடசாலைகள் வசதிமிக்க குடும்பத்தவர்களுக்கானவை என்பதைத் தெரிவிக்கின்றன. இலங்கையில் அரசாங்கத்தின் கல்விச் செலவுகளுக்கப்பால் தனியாரும் கல்விக்கான செலவுகளை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக உள்ளதைக் கட்டணங்கள் பற்றிய அட்டவணை காட்டுகின்றது. தற்போது இக்கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வாறான உயர்ந்த கட்டணங்கள் இவற்றைச் செலுத்தக்கூடிய உயர் வகுப்பினர் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காட்டுகின்றது. பெற்றோர்களின் ஆங்கிலக் கல்வி நாட்டத்தையும் இது காட்டுகின்றது. இவ்வாறான பாடசாலைகளில் கல்வி கற்பது கௌரவமானது என்ற பெற்றோர்களின் மனப்பாங்கையும் இது காட்டுகின்றது. அதேவேளையில், பிரசித்தி பெற்ற அரசாங்கப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் இயலாமையும் இதில் அடங்குகின்றது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற விரும்பும் பெற்றோர்கள் சர்வதேசப் பாடசாலைகள் முறையான ஆயத்தத்தை வழங்கும் என்றும் கருதுவதாகத் தெரிகின்றது.

சர்வதேசப் பாடசாலைகளைப் பெற்றோர்கள் விரும்புவதற்கான பல காரணங்களை இங்கு அட்டவணைப்படுத்த முடியும். அவை இலங்கைக்கல்வி



முறையில் ஒரு நிரந்தரமான அம்சமாக வந்துவிட்டது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. சர்வதேசப் பாடசாலைகளுக்குச் சாதகமாகப் பேசுவோர் முன்வைக்கும் வாதங்கள் பின்வருமாறு:

எந்த நாட்டிலும் மாற்றுக் கல்வி முறைகள் இருத்தல் வேண்டும். அரசாங்கப் பாடசாலை முறைமை மட்டுமே ஏகபோக உரிமை வகிக்க முடியாது. பெற்றோர்கள் தமது விருப்பத்துக்கேற்ப வெவ்வேறு கல்வி முறைகளை நாடுவதற்கான வாய்ப்பு முறைகளை வழங்குவது ஜனநாயக ரீதியாகச் சரியானது. எனவே, சர்வதேசப் பாடசாலைகள் இவ்வாறான ஒரு மாற்றுப் பாடசாலை முறையை வழங்குவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

நகர்ப்புறங்களில் உள்ள பிரசித்தி பெற்ற பிரதான அரசாங்கப் பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத மாணவர்களுக்குச் சர்வதேசப் பாடசாலைகள் கல்வி வாய்ப்பினை வழங்குகின்றன.

தாய்மொழியில் கிட்டாத தரமான நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஏராளமான கற்றல் சாதனங்கள் ஆங்கில மொழியில் கிட்டுகின்றன. இதனால் ஆங்கில மொழியில் கற்கும் மாணவர்களின் கல்வித்தரம் உயர வாய்ப்புண்டு. இவ்வாறான கற்றல் சாதனங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிட்டுவதில்லை.

இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சியற்ற ஆங்கிலம் பேசும் குடும்பங்களில் இருந்து வரும் (மேட்டுக்) குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகளுக்குச் சர்வதேசப் பாடசாலைகள் ஆங்கிலக் கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. (இத்தகைய குடும்பங்கள் எத்தனை என்பது தெரியவில்லை) பெரும்பாலான தகவல்கள் இணைய வழியில் பெறப்படுவதாலும் இணையத்தளங்கள் ஆங்கில மொழியில் உள்ளதாலும் ஆங்கிலமொழி வழியில் கற்பது சிறந்தது.

55% வேலை வாய்ப்புகள் ஆங்கிலமொழியில் செயற்படும் தனியார் துறையினரிடமே உண்டு. எனவே, ஆங்கில வழியில் கற்பதால் வேலை வாய்ப்புகளைப் பெற முடியும். (இலங்கையில் பாடசாலைகளில் கல்வி பயிலும் 40 இலட்சம் பிள்ளைகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில வழியில் கல்வி பயின்றால் இலங்கையின் தனியார்துறை அவ்வளவு பேரையும் உள்வாங்கும் சக்தி உடையதா என்ற எதிர்வாதமும் உண்டு)

கோளமயமாக்கப்பட்ட இன்றைய உலகில் ஆங்கிலமே விஞ்ஞானமொழி, வர்த்தகமொழி, இராஜதந்திர மொழி, சர்வதேசத் தொடர்பாடல் மொழி, சர்வதேச ரீதியாக உருவாக்கப்பட்டு வரும் சகல அறிவும் ஆங்கிலமொழி வழியிலிலேயே சகல உலக நாடுகளுக்கும் பரப்பட்டுகின்றது. எனவே, ஆங்கில மொழியில் பயில்வதால் பல நன்மைகள் உண்டு. (நாளை சீனமொழி இதே அந்தஸ்தைப் பெற்றால் அம் மொழியைப் பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற எதிர்வாதமும் உண்டு.)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல முக்கிய பிரச்சினைகள் உண்டு. காலந்தாழ்த்தியே மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். பட்டம் பெறும் போது வயது 25 - 26 ஆகின்றது. அனுமதி பெறும் மாணவர்கள் மூத்த மாணவர்களால் கடுமையான 'வதைக்கு' உள்ளாகின்றனர். இவ்வாறான 'வதை' காரணமாக பல்கலைக்கழகக் கல்வியை வெறுத்தவர்கள், துறந்தவர்கள் ஏராளம். எனவே, வெளி நாடுகளில் இவ்வாறான 'வதைகளைத்' தவிர்த்துக் கல்வி பெற இலண்டன் க.பொ.த உ/த பாடநெறிகள் உதவும். சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி பயின்றால் வெளிநாட்டில் கல்வி பெறும் வாய்ப்புகளைப் பெற முடியும். (இதற்கு மிக வசதியுள்ள வகுப்பினர்களே தகுதியானவர்கள் என்பது எதிர்வாதம்)

சர்வதேச பாடசாலைகள் தாம் இன ஒற்றுமையை வளர்க்க முடியும். அங்கு சகல இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி பெறமுடியும். ஆனால், அரசாங்கப் பாடசாலைகள் (ஒரு சில தவிர்ந்த) சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என மொழி மற்றும் இன ரீதியாகப் பிரிக்கப்பட்டுக் கல்வி வழங்குவதால் வேற்றுமைகள் அதிகரிக்கின்றன.

சர்வதேசப் பாடசாலைகள் தொடர்பான அரசாங்கக் கொள்கை அவற்றுக்கு முற்று முழுதாக எதிராக இல்லாவிட்டாலும் அவை தொடர்பாக சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற அளவிலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

---

கோளமயமாக்கலின் நேர்விளைவுகளாக இன்று இலங்கையில் சர்வதேச பல்கலைக் கழகங்களின் கிளைகளும் இணைப்பு நிறுவனங்களும் திறக்கப்படுகின்றன. இவற்றுக்குச் சமாந்தரமாக சர்வதேசப் பாடசாலைகளைத் திறத்தலும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கோளமயமாக்கற் செயற்பாடுகள் 1978ஆம் ஆண்டில் இலங்கையில் உருவாக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகளுடன் விரிவாக்கம் பெறலாயின. இவற்றோடு இணைந்த வகையில் ஆங்கிலமொழி மூலக்கல்வி காலனித்துவ ஆட்சிகால நிலையில் பெறப்பட்ட அந்தஸ்தை மீண்டும் ஈட்டத் தொடங்கியுள்ளது.

சர்வதேசப் பாடசாலைகளிலே கற்பதும், சர்வதே இணைப்புப் பல்கலைக்கழகங்களிலே கற்பதும் சமூக உயர் அந்தஸ்தின் சின்னங்களாக மாறியுள்ளன. சர்வதேசப் பாடசாலைகள் இலண்டன் பரீட்சைகளுக்குரிய கலைத்திட்டத்தை உள்ளடக்கிச் செயற்படுவதனால், இந்த நாடு பற்றிய பரவலான அறிவைப் பெறமுடியாத அன்னியமாதல் நிலைக்கு மாணவர்கள் மாற்றப்படு கின்றார்கள். இம்மாணவர்களே எதிர்காலத்தில் இலங்கையின் தலைமைத்துவப் பொறுப்புக் களைக் கூடுதலாகப் பெறும் வாய்ப்பைக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளின் செல்வாக்கு இலங்கையின் தேசிய கலைத்திட்டத்திலும் ஊடுருவத் தொடங்கியுள்ளது. வசதிமிக்க தேசிய பாடசாலைகள் ஏற்கனவே ஆங்கிலமொழி ஊடகக்கற்கை நெறிகளை ஆரம்பித்து விட்டன. ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளிலே பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பும் மேட்டுக்குடியினருக்கே அனுகூலமாகவுள்ளது. அவர்களே ஆங்கிலமொழி மூலத்தூண்டல்களைத் தமது இல்லங்களிலே வழங்கக்கூடிய நிலையில் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

("கல்வியியலும் நிகழ்பதிவுகளும்", சபா.ஜெயராசா, பக்: 76-77)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைக்கு தாமதமாக வரும் மாணவர்கள்: ஓர் பரிசீலனை

எம். சுந்தரராஜன்

ஒரு பாடசாலையின் சிறந்த முகாமைத்துவச் செயற்பாட்டிற்கு மாணவர் ஒழுக்கம் சம்பந்தமான செயற்பாடுகள் இன்றியமையாதது. அதிலும் மாணவர்களின் தாமதமான வரவு அன்று தொட்டு இன்று வரை ஒரு பிரச்சினைக்குரிய ஒன்றாகவே கருதப்படுகின்றது.

இவ் ஆய்வு கமு/விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவின் தரம் 06 - தரம் 13 வரையிலான மாணவர்களை அடிப்படையாக வைத்து சுமார் 3 மாத காலங்கள் தகவல்கள் பெறப்பட்டு (மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள்) பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின் முக்கிய நோக்கம் மாணவர்கள் என்னென்ன காரணங்களுக்காக பாடசாலைக்கு தாமதமாக வருகின்றனர் என்பதைக் கண்டறிந்து இந்த வகையில் இதே போன்ற பிரச்சினைகளுக்குட்பட்ட ஏனைய பாடசாலைகளுக்கும் நல்லதொரு தீர்வினைக் கூற முனைவதாக அமைகின்றது.

பாடசாலை நிருவாகத்திலும், பாடசாலை ஒழுக்கக்கட்டுப்பாட்டிலும் மற்றும் ஆளுமையினரிடையே பல்வேறு காரணங்கள் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாட்டின் மூலம் பாடசாலைகளிலோ, வேறு கல்வி நிறுவனங்களிலோ சிறந்த வெளிப்பாட்டினை ஏற்படுத்த முடியும்.

ஒரு பாடசாலை உச்சக்கட்ட பௌதிக வளங்களைக் கொண்டிருந்தது போதும் அவற்றை எல்லாம் நிர்வகிப்பதில் பிரச்சினைகள் எழாது. ஆனால் பாடசாலையில் ஒழுக்கம் சம்பந்தமான பிரச்சினைகள் எழுகின்றபோது அதிலிருந்து பல்வேறு முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகள் எழுகின்றன. எனவே இவற்றைத் தீர்த்து சுமுகமான ஒரு நிலையைத் தோற்றுவிப்பதற்கும், சமூகம் எதிர்பார்க்கும் பாடசாலையின் நோக்கங்களை அடைவதற்கும் பாடசாலையின் ஒழுக்கம் விருத்தியாக்கப்படல் வேண்டும். அப்போது தான் அப்பாடசாலை பயன்தரு தன்மையை அல்லது விளைத்திறனை அடைவதற்கு இது அவசியமான தொன்றாக அமையும்.

கமு/விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு இல் அமைந்துள்ள தரம் - 06 தொடக்கம் தரம் - 13 வரையிலான வகுப்பு மாணவர்களது விபரங்கள்

| தரங்கள் | மாணவர்களது எண்ணிக்கை (ஆ - பெ) |
|---|---|
| தரம் - 6 | 124 (83 + 41) |
| தரம் - 7 | 128 (83 + 45) |
| தரம் - 8 | 122 (84 + 39) |
| தரம் - 9 | 126 (73 + 39) |
| தரம் - 10 | 121 (68 + 43) |
| தரம் - 11 | 132 (89 + 43) |
| தரம் - 12 | 112 (52 + 60) |
| தரம் - 13 | 098 (52 + 46) |

**தாமதமாக வரும் மாணவர்கள் பற்றிய தரவுகள்**

| தரம் | மொத்தமாணவர்களது எண்ணிக்கை | மாதமொன்றுக்கு தாமதமாக வரும் மாணவர்களின் சராசரி | சராசரி நூற்று வீதத்தில் |
|---|---|---|---|
| தரம் - 06 | 124 | 22 | 18% |
| தரம் - 07 | 126 | 26 | 20% |
| தரம் - 08 | 122 | 34 | 28% |
| தரம் - 09 | 126 | 40 | 32% |
| தரம் - 10 | 121 | 45 | 37% |
| தரம் - 11 | 132 | 55 | 42% |
| தரம் - 12 | 112 | 26 | 23% |
| தரம் - 13 | 098 | 36 | 37% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு மாணவர்கள் தாமதமாக வருவதற்கான காரணங்களாக இனங்காணப்பட்ட பிரச்சினைகள் பற்றிய விபரம்

- நேரம் தாழ்த்தி எழுந்திருத்தல்.
- சுகவீனம்.
- பெற்றோர்களுடனான மனக்கசப்பு.
- சகோதரர்களுடனான மனக்கசப்பு
- நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்திருத்தல்.
- உணவு சமைப்பதில் ஏற்படும் தாமதம்.
- பாடசாலை உபகரணங்களைத் தேடுவதில் தாமதம்.
- வீட்டுச் சுமை.
- வீட்டுக் கஷ்ட நிலையால் கூலித்தொழில் மேற்கொள்ளல்.
- வீதிகளில் ஏற்படும் நெரிசல்.
- பாடசாலை வீட்டு வேலைகளை காலையில் மேற்கொள்ளல்.
- வாகனங்களின் (பஸ்வண்டி) ஒழுங்கின்மை.
- பெற்றோர்களின் கவனயீனம்.
- பெற்றோர்களின் கல்வியீனம்
- பாடசாலைத் தினத்திற்கு முன்னைய தினம் விடுமுறையாக இருத்தல்.
- காலை நேர வகுப்புகளுக்குச் செல்லல்.

இனம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பின்வரும் விதந்துரைப்புகள் முன்வைக்கப்படுகின்றன.

- பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் உடல் நிலையை அறிந்து அவர்களை சரியாக பராமரிப்பதோடு அவர்களுடன் அன்புடன் நடந்து கொள்ளல் வேண்டும்.
- பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளில் மிகவும் அவதானமாக இருப்பதுடன் வீட்டுச் சுமைகளை பெரியவர்கள் ஏற்றுக் கொள்வதோடு தங்களது பிள்ளைகளது உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அதனை நேரகாலத்துடன் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் நேரத்திற்கு எந்தவித பாதகம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- வெளியூர்களில் இருந்து வரும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலை வர ஏற்றவாறு மிகவும் நேரத்திற்கு பஸ் நிலையம் வந்து உரிய காலத்தில் பாடசாலைக்கு வர பழகிக் கொள்ள வேண்டும். பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு மணித்தியாலத்திற்கு முன்னராவது அவர்கள் தங்களது பஸ் தரிப்பு நிலையத்தை வந்து சேர வேண்டும்.



- மாணவர்கள் இரவு நேரங்களில் மிகவும் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்து உரிய நேரத்திற்கு நித்திரைக்கு செல்ல வேண்டும். இது அவர்கள் தாமதமாக எழுவதனை தவிர்த்து நேரத்திற்கும் நித்திரை பாடசாலைக்கு வர வழி வகை செய்யும்.
- பாடசாலைக்கு முந்திய நாள் விடுமுறை நாளாக இருப்பின் அந்த நாட்களில் மாணவர்கள் கூடிய சுமையுடைய வேலைகளைத் தவிர்ப்பதோடு வெளியூர்ப் பயணங்கள் செல்வதையும் தவிர்த்தல் நல்லது. இச்செயற்பாடுகள் மறுநாள் உரிய வேளைக்கு பாடசாலை செல்வதற்கு வழி வகுக்கும் என்பதை பெற்றோர்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.
- பெற்றோர்கள் பொருளாதார கஷ்டமுடையவர்களாக இருப்பினும் பிள்ளைகளது தேவைகளை கடைசிவரை வைத்திராது உரிய நேரத்திற்கு நிவர்த்தி செய்வதன் மூலம் இடர்பாடுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.
- மாணவரது தாமதமான வரவு சதவீதம் 06 இல் இருந்து தரம் 13 வரை செல்லச் செல்ல கூடிக் கொண்டு செல்வதைக் காணலாம். இதனை தவிர்க்க மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மென விழிப்புணர்வு கருத்தரங்குகளை பாடசாலை முகாமைத்துவக் குழு ஒழுங்கு செய்து நடாத்துதல் அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்களை ஊக்குவிப்பதில் அதிபரின் வகிபங்கு

எம்.எச். முஹம்மட் றாபி

நிறுவனமொன்று தனது நோக்கினை அடைந்து கொள்வதற்கு திறமையும் ஆற்றலும் மிகுந்த ஊழியர்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். இந்த வகையில் பாடசாலையும் ஒரு சமூக நிறுவனமாகும். பொதுவாக இந்நிறுவனத்தின் பிரதான நோக்கம் தேசப்பற்று மிக்க நற்பிரஜைகளை உருவாக்குவதாகும். இப்படியான பிரஜைகளை உருவாக்குவதில் அங்கு கடமை புரியும் ஆசிரியர்களின் பங்கு மிக வெளிப்படையானதாகும். சமூக எதிர்பார்ப்புக் கேற்ப தனது கற்றல் கற்பித்தல் பணியை திறம்பட முன்கொண்டு செல்ல கடமைப்பட்டவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

ஆசிரியர்களின் திறமையானது தனியே அவர்களின் ஆற்றலில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. இதனோடு ஊக்கமும் சேர்கின்ற போதுதான் அது முழுமையடைகின்றது. அதாவது ஆற்றலோடு ஊக்குவிப்புச் சேர்கின்ற போது (P = A x M) அடைவு உயர்ந்த மட்டத்தில் காணப்படும். ஊக்கமானது ஒன்றினைச் செய்வதற்கான விருப்பினையே குறித்து நிற்கின்றது. இன்று அநேக ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் ஊக்கத்துடன் செயற்படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அதாவது விருப்புடன் வகுப்பறைக்குள் நுழைவதில்லை எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு விருப்புடன் கற்றல் கற்பித்தல் பணியில் ஈடுபடாத போது அவற்றிலிருந்து கிடைக்கும் விளைவுகள் திருப்திகரமானதாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படும்.

எனவே, இந்நிலைமைகளை மாற்றியமைத்து ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணியில் திருப்தியான நிலையில் ஈடுபடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது முகாமையாளர் என்ற வகையில் அதிபரின் கடமையும் பொறுப்புமாகும்.

ஊக்குவித்தல் என்பதனை ஆங்கிலத்தில் "Motivation" என அழைக்கப்படுகின்றது. இச் சொல்லானது லத்தீன் மொழிச் "Mover" சொல்லான என்பதிலிருந்து பிறந்ததாகும். இது செயல், நடவடிக்கை, நகர்த்தல் என பலவாறு பொருள்படுகின்றது.

Fred Luthans என்ற அறிஞர் 'ஊக்குவித்தல்' என்பது குறைபாட்டுடன் அல்லது நடத்தையை தூண்டுவதற்கான தேவையுடன் ஒரு இலக்கினை அல்லது நன்மையை நோக்காகக் கொண்ட ஆரம்பிக்கப்படுகின்ற ஒரு செயன் முறை' ஆகும்.

Stephen P. Robbins 'நிறுவன ரீதியான இலக்கை நோக்கிய ஓர் உயர் மட்ட விளைவினை உருவாக்குகின்ற ஒரு செயல் முறை' Gray (1982) 'தனிப்பட்ட மனிதனுக்குள்ளான அல்லது வெளியான ஆர்வத்தை தூண்டுவதும் ஒரு குறிப்பிட்ட விளைவின் நோக்கத்தை அடைவதற்கான தன்மையைக் கொண்டதும்' ஊக்குவித்தல் எனப்படும். மேற்படியாக ஊக்குவிப்பு பற்றி பல அறிஞர்கள் பல விளக்கங்களைத் தந்துள்ளனர்.

பாடசாலை செயற்பாடுகளில் திறம்பட செயலாற்ற பின்வரும் விடயங்களில் அதிபர்கள் ஒரு முகாமையாளர் என்ற வகையில் கூடிய கவனம் செலுத்தி பணியாற்றுவது அவர்களின் திறமையையும், மதிப்பையும் கல்வி சமூகத்தில் படம்போட்டுக் காட்டுவதாய் அமையும்.

- பாடசாலைக்கு முகாமையாளர் என்ற வகையில் அதிபர்கள் கட்டாயமாக முகாமைத்துவ பயிற்சி நெறிகளைப் பயின்று தமது முகாமைத்துவ அறிவினை தவறு விருத்தி செய்து கொள்ள முயற்சிப்பது இன்றியமையாததாகும்.
- அநேகமாக, ஒரு நிறுவனத்தில் பணியில் சேரும் ஊழியர்கள் நிறுவனத்தின் நோக்கத்திற்காக உழைப்பதன் மூலம் தமது குறிக்கோள்களை அடையலாம் என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளனர். ஆசிரியர்களும் ஊழியர்கள் என்ற வகையில் அவர்களிடமும் தனிப்பட்ட குறிக்கோள்கள் காணப்படும். எனவே, கற்றல் கற்பித்தல் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஆசிரியர்கள் காட்டும் ஈடுபாட்டிற்காக அவர்களின் தனிப்பட்ட நல்ல விதமான குறிக்கோள்களை அடைவதற்கான வாய்ப்பினை அதிபர்கள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் தமது பணியை திறம்பட ஆற்றுவதற்கு தேவையான தகவல்களை அதிபர்கள் வழங்க முடியும். வகுப்பறை கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள், குறிப்பிட்ட பாடசாலைகளினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றப்பட வேண்டிய பணிகள், ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டிய திட்டமான நடவடிக்கைகள் போன்றவற்றை இது உள்ளடக்கியுள்ளது.


- பாடசாலை செயற்பாடுகள் பற்றி தீர்மானங்கள் எடுக்ககப்படுகின்ற போது குறிப்பிட்ட ஆசிரியர்களிடம் கலந்துரையாடி ஆலோசனைகள் பெற்று தீர்மானித்தல் முக்கியமானதாகும். இது பாடசாலை தொடர்பான முக்கிய தீர்மானங்களில் நாமும் தொடர்புபட்டுள்ளோம் என்பதை ஆசிரியர்களுக்கு உணர வைப்பதுடன் உள ரீதியான திருப்தியையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

- அதிபரானவர் ஆசிரியர்களுடன் சிறந்த தொடர்பினைக் கொண்டிருத்தல் அவசியம். தனியாள் வேறுபாடு அடிப்படையில் ஒவ்வொரு ஆசிரியர்களினதும் உள்ளார்ந்த தூண்டுதல்கள் வேறுபடுவதன் காரணமாக அவ்வேறுபாடுகளைக் கண்டறிந்து ஊக்குவிக்க தொடர்பாடலை அதிபர்கள் நல்ல முறையில் கையாள வேண்டும்.

- ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளில் காட்டும் திறமைகளை உரிய சந்தர்ப்பத்தில் உகந்த கௌரவத்துடன் பாராட்டுதல் வேண்டும். டீன் கிரஹம் (Deen Graham) என்பவரின் ஆய்வின் படி முகாமையாளர்கள் பயன்படுத்தக்கூடிய முக்கிய ஊக்குவிப்பு செயலாக இதனைக் குறிப்பிடுகின்றார். அதிபர்களும் முகாமையாளர் என்ற வகையில் தன் கீழ் கடமை புரியும் ஆசிரியர்களின் சிறந்த பணிகளை பாராட்டுகின்ற போது ஆசிரியர்கள் மேலும் வினைத் திறனுடன் செயலாற்ற துணை புரியும்.

- பாடசாலையின் வருடாந்த வேலைப் பகிர்வின் போது பொருத்தமான ஆசிரியர்களுக்கு பொருத்தமான பணிகளை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களின் ஆற்றல், திறமை, அனுபவம் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு பணிகள் ஒப்படைக்கப்படுகின்ற போது அப்பணியில் ஆர்வத்துடனும், விருப்புடனும் ஈடுபடுவர். மேலும் புதிய திறமைகளையும் விளக்கங்களையும் பெற்று கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும்.

- ஒப்படைக்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற இயன்றளவு அவசியமான வளங்களையும், வசதிகளையும் வழங்கி ஊக்குவித்தல் வேண்டும். குறிப்பாக கற்றல் கற்பித்தல் சாதனங்களை தாராளமாக வழங்கி வகுப்பறை செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதில் அதிபரானவர் பின் நிற்கக் கூடாது.




- ஊழியர்களை ஊக்குவிப்பதில் பணமும் ஒரு முக்கிய காரணியாகும். பாடசாலை அதிபர்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களத்தினால் வழங்க வேண்டிய பணக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கு முடியாவிட்டாலும் அது தொடர்பாக கல்வித் திணைக்களங்களுடன் தொடர்பு கொண்ட அதனை விரைவாகப் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய முடியும். ஆசிரியர்களின் சம்பள நிலுவை, வருடாந்த சம்பள உயர்ச்சி, கடன் வசதி, மற்றும் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு போன்றன தொடர்பாக அதிபர் கரிசனை காட்டும் பட்சத்தில் அதிபர் பற்றிய நல்ல அபிப்பிராயம் ஆசிரியர் மத்தியில் நிலவு வதுடன் அது மகிழ்ச்சிகரமான கல்விச் செயற் பாட்டிற்கும் இட்டுச் செல்லும்.

- ஆக்கபூர்வமான புதிய கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வகை செய்ய வேண்டும். இதனால் தனது கருத்துக்களும் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்ற உளப் பூர்வமான திருப்தி ஆசிரியர் மத்தியில் ஏற்படும். அத்தோடு ஆசிரியர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், கஷ்டங்கள், மனநிலை தொடர்பாகவும் அதிபர் கவனம் செலுத்தல் இன்றியமையாததாகும். இவைகளைப் புரிந்து கொண்டு செயற்படும் பட்சத்தில் இரு தரப்பாருக்கும் மத்தியில் ஒரு உவப்பான போக்கு புலப்படும்.

- ஆசிரியர்கள் மென்மேலும் தமது கல்வித் தரத்தையும், தொழில் தராதரத்தையும் அதிகரித்துக் கொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு அதிபர்கள் ஆதரவும், உறுதுணையும் புரியக் கூடிய வகையில் தனது மனப்பாங்கை நன்கு விருத்தி செய்து கொள்வது முக்கியமானதாகும்.

- பாடசாலைகளில் ஆசிரியர் நலநோம்பல் பேணல் முக்கியமானதாகும். ஆசிரியர் நலநோம்பல் என்பது ஆசிரியர்களின் அடிப்படைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். குறிப்பாக பாடசாலைக்குள் சுகாதாரமான சிற்றுண்டிச்சாலை, மலசலகூட வசதி போன்ற வசதிகள் பாடசாலையில் காணப்படாவிட்டால் ஆசிரியர்கள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முகாமையாளர் கரிசனையுடன் செயற்பட வேண்டும். இதற்கு அதிபரானவர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற முயற்சிக்க வேண்டும்.

- ஆசிரியார்களின் கடமை அல்லது கற்பித்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு பிரதான காரணமாக அமைவது ஆசிரியருக்கு தமது பணியின் மீது திருப்தியேற்படுவதாகும். இத்திருப்பதியானது அவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படலுடன் தொடர்பானதாகும். திருப்தியடைந்த ஓராசிரியரின் கற்றல் கற்பித்தல் பெருமளவில் தரத்தில் கூடியதாகும். ஆகவே. ஆசிரியர்களின் அடிப்படைத் தேவைகள் பெருவாரியாக நிறைவேற்றப்படுவதனால் ஆசிரியர்களுக்கு பாடசாலை மிகுந்த மகிழ்ச்சிக்குரியதும். ஊக்குவிக்குமிடமாகவும் அமையுமென்பதில் சந்தேகமில்லை.

மேற்படியாக அதிபரானவர் ஊக்குவிப்பு தொடர்பாக பல்வேறு விடயங்களை அறிவு ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் தெளிவினைப் பெற்றிருக்க வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். ஊக்குவிப்பு தொடர்பாக காலத்துக்கு காலம் வெளிவருகின்ற ஊக்குவித்தல் கோட்பாடுகள் பற்றிய அறிவினை அதிபர்கள் உள்வாங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்போது தான் பாடசாலை சார் பல பிரச்சினைகளுக்கும் வினைதிறனான வகையில் தீர்வுக் கண்டு ஓர் ஆரோக்கியமான கவின் நிலையை பாடசாலையில் தோற்றுமிக்க முடியும்.




("வழிகாட்டலும் ஆலோசனையும்", விமலா கிருஷ்ணபிள்ளை பக்:37)

**வரைபு - 2 பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விண்ணப்பப் படிவம்

அகவிழி
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

பெயர் (முழுப் பெயர்) : ______________

கற்பிக்கும் பாடசாலை : ______________

பாடசாலை முகவரி : ______________

தொலைபேசி/தொலைநகல் இல. : ______________

மின்அஞ்சல் முகவரி : ______________

கற்பிக்கும் பிரிவு : ______________ ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ______________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

______________
கையொப்பம்

திகதி : ______________

**காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.**

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்;

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனி இதழ் | : 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை | : 7000/- |
| உள் அட்டை (முன்) | : 6000/- |
| உள் அட்டை (பின்) | : 5000/- |
| உள் பக்கம் | : 4000/- |
| நடு இருபக்கங்கள் | : 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866


**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House Road,
Tel: 065-2222097



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்




**அடிப்படை உளவியல் | மணியம் சிவகுமார் | விலை : 480/-**

உளவியல் என்பது வரையறைக்குட்படுத்த முடியாத பரந்துபட்ட ஓர் அம்சம். உளவியல் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகள் நாள்தோறும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. மனித நடவடிக்கைகளை மிகவும் நுணுக்கமாகவும் அறிவியல் முறைப்படியும் உளவியலாளர்கள் ஆராய்ந்து, தெளிவானதும் நுட்பமானதுமான செய்திகளை வழங்கி வருகின்றனர். நமது உளவியலாளர்களின் [illegible] வழங்கி சில விடயங்களைப் புறக்கணிக்கின்ற தன்மைக் காணப்படுகின்றது. இந்நூலானது, எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய பல அடிப்படை விடயங்களை உளவியல் கண்களால் அலசுகின்றது.

**ஆளுமை உளவியல் | மணியம் சிவகுமார் | விலை : 280/-**



ஆளுமை உளவியலுக்குப் "பெருந்தலைவர்கள்" வரிசையில் [illegible] சிந்தனையாளர் சிறப்பிடம் பெறுகின்றனர். பின்னைய உளப்பகுப்புச் சிந்தனையாளரின் ஆளுமை நோக்கும் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் பண்பாகவுள்ளது. உளவியல் எண்ணக்கருக்களை வரையறை செய்வதிலும், விளக்குவதிலும் மேலெழுந்துவரும் மட்டுப்பாடுகளை ஆசிரியர் அறிகை நிலையில் அணுகியிருத்தல் நூலாக்கத்தில் இடம்பெற்றுள்ள புறவயத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.



**திருக்குறளும் முகாமைத்துவமும் | தி.வேல்நம்பி | விலை : 280/-**

ஒவ்வொரு சமூகமும் தம் வாழ்வியல் முறைமை, உலகக் கண்ணோட்டம், அறிவியல், அறவியல் என அனைத்தையும் தம் மரபார்ந்த வழக்காறுகளிலும் இலக்கியங்களிலும் பொதிந்து வைத்துள்ளன. சுதேச பண்பாடுகளின் இந்த அறிவுத்தேடல் முறைமைகள் வாழ்க்கையின் தத்துவங்களைப் பதிவாக்கும் அதேவேளை இன்றைய நடைமுறையியல் சார்ந்த அறிவுத் துறைகளில் முதன்மைபெறக் காணலாம். "[illegible]" எனும் அகமுகப் புரிதல் முறையிலிருந்து இன்றைக்குள்ள ஆய்வு அனுபவங்கள் வரை இந்தத் தேடல் விரிவுபெறக் காணலாம். தமிழின் ஒப்பற்ற வாழ்வியல் இலக்கியமான திருக்குறளில் பொதிந்துள்ள முகாமைத்துவ எண்ணக்கருக்களைத் தெளிவுபடுத்தும் இவ்ஆய்வானது தமிழியல் ஆய்வுப்புலத்துக்குப் புதிய வெளிச்சம் தருகின்றது.

**கல்வி நுட்பவியல் | சபா.ஜெயராசா | விலை : 280/-**




சமகாலத்து ஆசிரிய மாணவர்கள் கல்வியியலே "கல்வி நுட்பவியல்" என்று கற்கைப்புலம் ஒன்றினைக் கட்டமைத்துள்ள நிலையில் இந்நூலின் வரவு பயனுடைய ஆக்கமாக அமைகின்றது. ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி கல்வி நிர்வாகிகளுக்கும் பெற்றோருக்கும் பயனுடைய பல புதிய புதிய கருத்துக்களும் சிந்தனைகளும் இந்நூலிலே இடம் பெற்றுள்ளமை கல்வியியல் இலக்கியவளத்துக்கு இந்நூல் புதுவரவாய் சேர்க்கின்றது.

*CHEMAMADU BOOK CENTRE*
*CHEMAMADU PATHIPPAKAM*
*50,52 People's Park, Colombo-11, Sri Lanka*
*T.P:011-2472362 Fax: 011-2448624, E-mail:Chemamadu@yahoo.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

தனலட்சுமி புத்தகக்கடை
29, பிரதான வீதி,
கப்புற்றல
தொ.பே.இல: 057-2268205

கிரிசான் புத்தக நிலையம்
07, தபால்நிலைய வீதி,
மஸ்கெலியா.
தொ.பே.இல: 071-9531554

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 024-4920733

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ் றோட்,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, றாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

அல்குரசி புத்தக நிலையம்
28,1/2, புகையிரத வீதி
மாத்தளை.
தொ.பே.இல: 066 3662228

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org